குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

50 காசு

உணவுச் சிறப்பு

காமதேனு வனஸ்பதியினுல்
இன்னும் உயர்வடைகிறது

உப்பு பக்ஷணங்கள். இனிப்பு பண்டங்கள் **காமதேனு** வனஸ்பதியில் தயார் செய்தால் நல்ல ருசியாய் இருக்கும். நெய் போன்றது; விலை குறைவானது.

கண் பார்வைக்குத் தேவை யானதும் சரும உபாதைகளைப் போக்க வல்லதுமான விடமின் 'A' கலக்கப் பெற்றது.

தயாரிப்பு :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டிரியல் கார்ப்பொரேஷன் லிட்.,

மேட்டூர் அணை, சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :

சேஷசாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிட்.

3712

பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

ANNOUNCEMENT.



"TEXTOOL"

TAKES PRIDE TO ANNOUNCE
THAT THEIR 4 CYLINDER
36 To 86 H. P.
AUTOMOTIVE DIESEL ENGINES

will be out in the market Soon!!

Await Further News !!!

MANUFACTURERS:-

Textool Company Limited,

Post Box No. 221,

COIMBATORE.

Phone: 409
1409

Gram:
'TEXTOLCO'

மின்னல் வேகமும், அவசரமும் மிகுந்த இக்காலத்தில் விபத்துக்கள் எப்பொழுது, எங்கு, எப்படி ஏற்படு மென்பதை யாரும் அறிய இயலாது!!...

எனினும் சகல விதமான விபத்தினின் றும் பாதுகாப்பாக இன்ஷ்யூர் செய்து கொள்ளலாமென்பதைஒவ்வொருவரும் அறிவதவசியம்.

ரூ. 5000-க்கு இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ள வருடாந்திர பிரீமியம் ரூப்பாய் பன்னிரண்டரைதான்.

விவரங்களுக்கு :

இந்தியன் மியூச்சுவல் ஜெனரல்
இன்ஷ்யூரன்ஸ் சொசைட்டி
லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 35, மௌண்ட்ரோடு, சென்னை-2

மலர் 17 இதழ் 4

சார்வரி—ஆடி

உள்ளுறை

பக்கம்

1. திருடாமை 5
—காந்தியடிகள்
2. காந்தி வினா-விடை 10
—ராஜாஜி
3. இந்தியாவைப்பற்றிப் பெதிக் லாரன்ஸ் 17
—பி. ஈசுவரமூர்த்தி
4. ஜெர்மன் அற்புதம் 24
5. ஓய்வு நேரம் 31
6. பிரதேச ஆராய்ச்சி 33
7. விதியும் மதியும் 37
—வ. அ. தியாகராஜன்
8. காமன்வெல்த் கூட்டுறவு 42
9. வளரும் விஞ்ஞானம் 46
10. கொய்த மலர்கள் 50
11. தொல்பொருள் வயது 62
12. துருக்கி 67
13. காட்டு வளம் 77
14. புதிய மருந்துகள் 79

திருடாமை

காந்தியடிகள்

பிரம்மச்சரியம், நாவின் சுவையுணர்ச்சியை வசப் படுத்துதல் ஆகியவை சத்திய உபாசனையின் அம்சங்கள் ஆவதுபோல, திருடாமையும் ஓர் அம்சமாகும்.

அன்பும், சத்தியமும் ஒன்றேயாயினும், சத்தியத் தையே நான் பற்றுக்கோடாகக் கொள்கிறேன். எல்லா வற்றையும் கடந்து நின்று ஒளிர்வது சத்தியமே.

சத்திய அனுபவம் பெற, அன்பு அல்லது அஹிம்சை வழியாகும்; சத்திய வேட்கை உடையவன் எவரையும் வெறுக்க இடமில்லை. சத்தியத்திலுள்ள பற்றே அவனை வெறுப்பு உணர்ச்சியினின்றும் நீக்கி, அன்பு வழியில் இழுத்துச் செல்லும். இப்படி அன்பு வழியில் இழுபடு வது சிரமமான காரியம். அதைவிடச் சிரமம் சத்தியத் தின் திவ்விய லட்சணங்களின் காட்சியைப் பெறுவது; அதன் ஒரு பகுதியைக்கூடக் கண்டு உணர்வது பெரிய காரியம். உடல் தாங்கிய நமக்குப் பரிபூரணமாக அஹிம்சையை அனுஷ்டிப்பது எவ்வளவு கடினமோ, அவ் வளவு கடினம் சத்தியத்தைப் பற்றி முற்றுணர்வு பெறுவதும்.

சத்தியத்தை நாடி அன்பு வழியில் செல்பவன் திருட்டுத் தனமாக எதையும் செய்ய வேண்டியதில்லை; முறைதவறிய விஷயங்களில் அவனுடைய மனம் செல்லா.

ஆனாலும் விழிப்போடு இருக்காவிட்டால், நாமெல்லோ ரும் நம்மை அறியாமலே திருட்டுக் குற்றத்துக்கு ஆளாகி விடுவோம்.

மற்றவர்களுடைய பொருள்களை அபகரிப்பதுதான் திருட்டு என்பதல்ல; நமக்கே சொந்தமான பொருள்களை யும் திருட்டுத்தனமாக உபயோகிக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. உதாரணமாக, தன் குழந்தைகளுக்குத் தெரியா மல் ஒருவன் பண்டங்களை மறைவாகச் சாப்பிட்டால் அது திருட்டல்லவா? பொது உக்கிராணத்திலிருந்து ஒரு சிறு சர்க்கரைத் துண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டால் அது களவுதானே?

மற்றவர்களுடைய பொருள்களை அவர்களுடைய கண்ணெதிரே எடுத்தாலும், அவர்களுடைய சம்மதம் பெறாவிட்டால் அவற்றைத் திருடி அபகரிப்பது போலத் தான். ஒருவனுக்கும் சொந்தமில்லாத பொருள்களை எடுத்துக் கொள்வதும் அப்படியே. உடையவரின்றித் தெருவில் கிடக்கும் பொருள்கள் ஊர்ப் பொதுவுக்குச் சொந்தமாகும். இப்படி ஏதேனும் ஒரு பொருள் ஆசிர மத்துக்கு அருகில் கிடந்தால் அதை நாம் ஆசிரம நிர்வாகி யிடம் கொடுத்துவிடவேண்டும். உடையவர் யாரென்பது புலனாகாவிட்டால், அதை அவர் போலீசாரிடம் ஒப்பு வித்துவிடுவார்.

திருடாமை என்ற பண்பைப் பெற முயலுபவன் இன்னும் நுட்பமான குறைகளிலிருந்து விடுபடவேண் டும். குறித்த ஒரு பொருள் அவனுக்கு அத்தியாவசிய மாக இல்லாவிட்டால், உடையவரிடம் சம்மதம் கேட்டுக் கூட அதை வாங்கலாகாது; நமக்கு அவசியமில்லாத எதையும் ஏற்றுக் கொள்வது திருட்டுத்தான். முக்கிய

மாக உணவு விஷயத்தில் இக் குற்றம் ஏற்படும். பசியாதபோது உணவை ஏற்றுக் கொள்வதும், பசிக்கும் போதுகூட அளவுக்கு மிகுந்துகொள்வதும் இதற்கு உதாரணங்கள். நமக்கு எதுவேண்டும், எவ்வளவு வேண்டும் என்பது தெளிவாகத் தெரிவதில்லை; அவசியமில்லாத பலவற்றை அவசியமென்று மதி மயங்கி நிற்கிறோம். நாம் நம்மிடமுள்ள பொருள்களைப்பற்றிக் கருத்தோடு நினைத்துப்பார்த்தால், பலவற்றை அனாவசியமென்று தள்ளிவிடுவோம்; நமது தேவைகள் குறைந்துகொண்டே வரும். அப்படி நம்மில் பலர் குறைத்துக் கொள்ளாததால் தான் உணவு, உடை போன்ற இன்றியமையாத பொருள்கள் கூட இல்லாமல் கோடிக் கணக்கான மக்கள் வறுமையால் வாடுகிறார்கள்.

பொருள்களை அபகரிப்பது குற்றம் என்பது தெளிவாகத் தெரிகிறது; பொருள்களை அபகரிக்க வேண்டும் என்று சிந்தையில் நினைப்பது நுட்பமான திருட்டு. ஆசை நோக்கோடு கண்ணால் பார்த்தாலும் குற்றமே.

உப்வாசமிருப்பவன் மற்றவர்கள் உண்ணும் உணவை மனத்தால் ருசித்தாலும் உபவாச மகிமை கெட்டுவிடும்; திருட்டுக் குற்றமும் ஏற்படும். உபவாசம் முடிந்தபின் உண்ணும் உணவு வகையில் மனம் ஈடுபட்டால் அதுவும் திருட்டுத்தான்.

திருடாமை என்ற நோன்பை ஏற்றவன் எதிர் காலத்தில் பெறவேண்டிய பேறுகளைப் பற்றிச் சிரத்தை கொள்ள மாட்டான். பல வகைத் திருட்டுகளுக்கு இந்தச் சிரத்தையே மூலகாரணம். இன்று ஒரு பொருளைப் பெறுவதில் நாட்டம் கொண்டால், நாளைக்கு

அதைப் பெற முறைதவறிக் கூட முயலுவோம். திரு டாமை பயில்பவன் அன்ருடம் பெறும் பேறுகளில் திருப்தியடையவேண்டும்.

பொருள்களைத் திருடுவது போலவே, கருத்துக்களைத் திருடுவதும் குற்றம். வேறொருவர் சிந்தனையின் விளைவாக வந்த கருத்தைத் தனதாகப் பாவிப்பது திருட்டு. பல அறிவாளிகள் இக்குற்றம் செய்திருக்கிருர்கள்; இன்னும் செய்கிருர்கள்.

ஆந்திர நாட்டில் நான் கண்ட ராட்டையைப் போல இங்கு ஒரு ராட்டையைச் செய்வித்து, என் சொந்த யுக்தியால் செய்ததாகப் பாவனை செய்தால், நான் செய்யும் இக் காரியம் திருட்டு என்பதில் என்ன சந்தேகம்? ஆணவ மயக்கத்தால், தற்பெருமைக்காக, இப்படிப் பலர் செய்கிருர்கள்.

திருடாமை என்னும் விரதத்தை நுட்பமாகப் பாவிக்க முற்படுகிறவனுக்கு ஆணவம் கூடாது; பணிவு வேண்டும்; நடை உடை பாவனைகளில் அடக்கம் வேண்டும். அவன் விழிப்போடும், கருத்தோடும் எப்பொழுதும் முயல வேண்டும்.

துறவு, திருடாமை ஆகிய இரு நோன்புகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. நமக்கு வேண்டாத பொருள்களை நாம் சேர்த்து வைத்திருந்தால், திருட்டுச் சொத்தை வைத்திருப்பதுபோலத் தான். பொருள்களை திரட்டி வைப்பதெல்லாம் எதிர் காலத்தில் சுபிட்சமாக இருப்பதற்காகத்தான். சத்தியத்தை நாடி அன்பு வழியில் செல்கிறவனுக்கு எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை கூடாது. கடமையைச் செய்துகொண்டே போனல் தன் நலத்தைக் கடவுளே கவனித்துக் கொள்வார் என்ற திட

நம்பிக்கை சத்திய உபாசகனுக்கு எப்போதும் இருக்கும். நாளைக்கு வேண்டிய பொருளை கடவுள் இன்றே படைத்து வைப்பதில்லை. அப்போதைக்கப்போது வேண்டியதை மட்டும் தான் அவர் உண்டாக்கி அருளுகிறார்.

நம்மிடமுள்ள பொருள்களைக் குறைத்துக் கொள்ள இடைவிடாது முயலவேண்டும். அவ்வாறு குறைத்துக் கொண்டு எளிய வாழ்க்கை நடத்துவது தான் உயர்ந்த நாகரிகம். அவசியமில்லாத பொருள்களைக் குவித்து வைத்திருப்பது, பக்கத்திலுள்ளவர்களைத் திருடும்படித் தூண்டுவதாகும்.

வேலைசெய்து சாப்பிடவேண்டும் என்று கடவுள் மனிதர்களைப் படைத்தார். வேலை செய்யாமல் சாப்பிடு கிறவர்களைத் திருடர்கள் என்று கடவுள் கூறினார்.

காந்தி வினா - விடை

ராஜாஜி

[சுமார் முப்பத்தேழு ஆண்டுகளுக்குமுன் ராஜாஜி அவர்கள் 'பஞ்சாமிர்தம்' என்ற பத்திரிகையில்எழுதிய கட்டுரை இது. அப்பத்திரிகையில் கட்டுரையாளர் பெயர் "ஸ்ரீ C. ராஜகோபாலாச்சாரியார் B. A., B. L., சேலம்" என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.]

(1)

வினா: காந்தி மகாத்மா போதிக்கும் முக்கிய தத்துவம் என்ன?

விடை: அன்பு.

வினா: அவர் முக்கிய கொள்கை அஹிம்சையல்லவா?

விடை: ஆம். அஹிம்சா தர்மத்தின் தத்துவமும் அன்பும் ஒன்றே.

வினா: அதெப்படி?

விடை: மனம், வாக்கு, செய்கை இவை மூன்றும் அஹிம்சை வழியில் செல்ல வேண்டுமானால், மனத்தில் அன்பு வளர்தல் வேண்டும். அஹிம்சைக்கு அன்புதான் மூலாதாரம்.

வினா: தற்போது நம்மை ஆண்டுவரும் ஆங்கிலேயர் மீது காந்தி மகாத்மாவுக்குப் பகையில்லையா?

விடை: இல்லை.

வினு: ஆங்கிலேய ஆட்சியைத் தொலைக்க மகாத்மா காந்தி முயலுகிறுரல்லவா?

விடை: நாம் சுதந்திரம் பெறவேண்டி முயலுகிறுர். இத் தேசம் சுதந்திர மடைந்தால்தான் ஏழைகள் சுக மாயும், மானத்துடனும் வாழ முடியும். நாம் சுதந் திரம் அடைவதால் ஆங்கிலேயருக்கு எவ்விதக் குறைவு அல்லது துன்பமும் நேரிடாது.

(2)

வினு: நாம் சுதந்திரம்பெற இன்றியமையாதது என்ன?

விடை: ஒற்றுமை

வினு: பல ஜாதி மத பேதங்கள் இருக்க, ஒற்றுமை எப் படி உண்டாகும்?

விடை: ஜாதி மத பேதங்கள் இருந்தாலும் அன்பினுல் ஒற்றுமை உண்டாகும்.

வினு: ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அன்புடன் வாழ முடியுமா?

விடை: அவர்களுள் பகைமைக்குக் காரணமே இல்லை. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இன்னும் மற்றெல் லோரும், அன்புடன்கூடி வாழலாம். அப்படி வாழ்ந்தாலொழிய சுதந்திரத்தை அடையவாவது நிலைநிறுத்தவாவது முடியாது.

(3)

வினு: கதர் என்றுல் என்ன?

விடை: கைராட்டினத்தால் நூற்ற நூலைக் கொண்டு, கைத்தறியில் நெய்த துணிக்குக் கதர் அல்லது

காதி என்று பெயர். இதைத் தமிழ்நாட்டில் கதர் என்று வழங்குவார்கள்.

வினு: இது நம்முடைய நாட்டிற்குப் புதியதா?

விடை: இல்லை. சில வருஷங்களுக்குமுன் இந்நாட்டில் உள்ள நாம் எல்லோரும் இராட்டின நூலால் நெய்த துணியைத்தான் உடுத்தி வந்தோம் — வெளிநாடுகளுக்குக்கூட அனுப்பி வந்தோம்.

வினு: கதர் என்கிற பெயர் முன்காலத்தில் வழங்கி வந்ததா?

விடை: வேறு துணியே இல்லாதிருக்கையில் கதர் என்கிற தனிப்பெயர் இருக்கக் காரணமில்லை.

வினு: கைத்தறியில் ஆகும் துணியெல்லாம் சுதேசியல்லவா?

விடை: அல்ல. சீமை நூலைக் கொண்டு கைத்தறியில் நெய்தால், அத்துணி கதர்த்துணியல்ல.

வினு: கதர்த் துணி உடுத்துவதால் என்ன பயன்?

விடை: நாம் உடுத்தும் துணியும், அதற்கு வேண்டிய நூலும் நம்முடைய வீடுகளிலே உண்டானல், துணிக்காக நாட்டின் செல்வம், நாட்டைவிட்டு வெளியே போகவேண்டியதில்லை. ஏழைக் குடியானவர்களும் வறுமையால் பீடிக்கப்படாமல் இருப்பார்கள். நாடு முழுவதும் தொழில் ஏற்பட்டுப் பஞ்சம் நீங்கும்.

வினா: நம் நாட்டிலே உண்டான மில் துணிக்கு ஏன் மகாத்மா ஆட்சேபிக்கிறார்?

விடை: மில் நூலால் நெய்த துணியை நாம் கட்டுவதால், தேசத்தில் பசியால் வருந்தும் எல்லா ஏழைகளுக்கும் தொழிலும் உணவும் வேண்டிய அளவு உண்டாகாது. ஒரு ரூபாய் கொடுத்துக் கதர் வாங்கினோமானால், 16 அணாவும், அதை உண்டாக்கின ஏழைகளுக்கே போகும். மில்துணி அல்லது மில் நூலால் நெய்யப்பெற்ற கைத்தறித் துணி இவைகளுக்குக் கொடுக்கும் விலையில் ஒரு சிறு பகுதிதான் ஏழைகளைச் சேரும்.

வினா: சுயராஜ்யத்திற்குக் கதர் ஏன் இன்றியமையாதது?

விடை: இந்த நாட்டிலுள்ள கோடிக்கணக்கான ஏழைகளுக்குத் தொழில் ஏற்பட்டு வறுமை நீங்கினால் தான், காந்தி மகாத்மா கோரும் சுயராஜ்யம் வந்த வண்ணமாகும். சில இந்தியருக்கு அதிகாரப் பதவிகள் கிடைத்தால் மட்டில் உண்மையான சுயராஜ்யமாகாது. நாமெல்லோரும் கைராட்டினக் கதர் கட்டினால்தான், கோடிக் கணக்கான ஏழைகளுக்குத் தொழில் கொடுப்போம்; வறுமை நீங்கும்.

வினா: எல்லோரையும் கதர்க் கட்டச் செய்ய முடியுமா?

விடை: ஏழைகளிடத்தில் அன்பு உண்டானால், எல்லோரும் நிச்சயம் கதர் கட்டுவார்கள்.

வினா: இறந்துபோன ஒரு கைத்தொழிலைப் புதுப்பிப்பது கடினமல்லவா?

விடை: கடினம் தான். நாம் நூற்றால் மற்றவர்களும் அதைப் பார்த்து நூற்பார்கள். அன்பினாலும் உழைப்பாலும் எந்தத் தடைகளையும் தாண்டலாம்.

வினா: கதர் உடுத்தினால் வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு செல்வம் தேசத்திற்கு மிகுதியாகும்.

விடை; குறைந்தது வருஷம் ஒன்றுக்கு 60 கோடி ரூபாய் மிகுதியாகும். இத்தொகை ஏழைகளின் குடும்பங்களுக்கு வருஷா வருஷம் போய்ச் சேரும்.

(4)

வினா: தீண்டாமை ஒழித்தல் என்றால் என்ன?

விடை: பஞ்சமர்கள் என்பவர்கள் மற்றவர்கள் அருகில் வருவதனாலும் அவர்களைத் தீண்டுவதினாலும் அசுத்தமாய் விடுவோம் என்று தவறாய் நினைப்பதை ஒழிக்க வேண்டும். அசுத்தம், வியாதி இவ்வகைகளை வெறுக்கவேண்டுமே தவிர, மனிதர்களாய்ப்பிறந்த ஒரு வகுப்பாரை விலக்குவது குரூரமான பாவமாகும்.

வினா: மகாத்மா ஜாதி பேதமே கூடாது என்கிறாரா?

விடை: அவர் அப்படிச் சொல்லவில்லை. ஜாதி பேதங்கள் இருந்தாலும், பஞ்சமர்களுக்குக் கோயில், குளம், மடம். தெரு முதலிய இடங்களுக்குப் போகவர எவ்விதமான தடையும் இருக்கக்கூடாது என்று சொல்லுகிறார். மற்ற ஹிந்து ஜாதியார்கள் எப்படி ஒன்றாய் வாழ்கிறார்களோ, அப்படியே பஞ்சமர்களும் மற்றவர்களுடன் கலந்து, ஒடுக்கப்படாமல் வாழ வேண்டும் என்கிறார்.

வினு: இது நம்முடைய மதத்திற்கு விரோதமல்லவா?

விடை: ஹிந்து மதப்படி மகாபாதகங்கள் செய்பவர் சண்டாளர் ஆவார்கள். மற்றவர்கள் எவரையும் விலக்கி வைக்க ஆதரவு கிடையாது. அப்படியிருந் தாலும், அந்த அநாகரிக வழக்கத்தை மாற்றத் தான் வேண்டும்.

வினு: இது அசாத்தியமல்லவா?

விடை: ஒரு நாளுமல்ல. மனத்தில் அன்பை வளர்த்தோ மானுல், ஒரே நொடியில் இக்கொடிய வழக்கம் தொலேயும்.

(5)

வினு: இவைதானு மகாத்மா காந்தியின் உபதேசங்கள்?

விடை: ஆம்.

வினு: அவர் சொல்லுகிற எல்லாவற்றிற்கும் அன்புதான் வழி என்று சொல்லுகிறீர் அல்லவா?

விடை: ஆம். மகாத்மா வேண்டுவது அன்பு ஒன்றே தான்.

வினு: அன்பை எல்லோராலும் வளர்க்க முடியுமா?

விடை: முடியும்.

வினு: அது எப்படி?

விடை: மனித ஜாதிக்கே அன்பு இயல்பாகும்; அது பிறவி யில் ஆத்மாவுடன் கூடி நிறைந்து நிற்கும்.

வினு: அப்படியானுல் ஏன் நாம் அனைவரும் அன்புடன் வாழாமல் கஷ்டப்படுகிறேம்?

விடை: ஆசை, கோபம் இவைகளால் உண்மையான அன்பு அடக்கப்பட்டு, மயக்கத்தில் மூழ்கி நிற்கிறோம்.

வினா: அன்பை எப்படி வளர்ப்பது?

விடை: ஆசை, கோபம் இவைகளை அடக்கியாள முயன்று, "பகவானே! எல்லோரிடத்திலும் என் உள்ளத்தில் அன்பு நிறையச் செய்வாயாக! உலகத்தில் எல்லோருள்ளத்திலும் அன்பைப் பெருக்குவாயாக!" என்று தினமும் கடவுளை வணங்கிப் பிரார்த்தித்தோமானால், நிச்சயமாய் அன்பு எல்லோர் உள்ளத்திலும் வளரும்.

இந்தியாவைப் பற்றிப் பெதிக் லாரன்ஸ்

பி. ஈசுவரமூர்த்தி

சமீபத்தில் ஆக்ஸ்போர்டுப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தெற்கு ஆசிய செமினர் என்ற அரங்கிலே லார்டு பெதிக் லாரன்ஸ் இந்தியாவைப் பற்றிப் பேசினர். பெதிக் லாரன்ஸ், இங்கிலாந்து மந்திரி சபையிலே இந்திய விவகாரங்களுக்கு மந்திரியாக இருந்தவர். இந்தியச் சுதந்திரம் பற்றி விவாதிக்க இந்தியாவுக்கு வந்த கிரிப்ஸ் மிஷன் என்ற குழுவில் தலைசிறந்து விளங்கியவர். இந்தியாவிடம் பேரன்பு உடையவர். காந்தியடிகளுடனும், ஏனைய இந்தியத் தலைவர்களுடனும் நட்புறவை வளர்த்தவர். அவர் பேசியதன் சாரம்:—

இந்தியா புராதனமான ஒரு தேசம். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நாகரிகம் அடைந்து விளங்கிய ஒரு தேசம். இங்கிலாந்தில் மனிதர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தபோது, இந்தியா சிறந்த நாகரிக நாடாக இருந்தது சரித்திர உண்மை. ஆனல் இந்தியா என்றுமே ஓரே அரசியலின் கீழ், ஓரே தேசீய உணர்வோடு வாழ்ந்ததாகச் சரித்திரம் கூறவில்லை. இந்த ஒற்றுமை உணர்ச்சி, ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்து போராடி ஆளத்தொடங்கி நூறு ஆண்டுகள் கழித்துத்தான் உண்டாயிற்று.

முதன் முதல் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்குச் சென்றது வியாபாரம் செய்யத்தான். ஜெஹாங்கீர், ஷாஜகான் முதலிய முஸ்லிம் மன்னர்கள் காலத்திலேயே

ஆங்கிலேய வியாபாரிகள் தங்கள் அரசாங்கத்தின் சம்மதம் பெற்று இந்தியாவில் கல்கத்தா முதலிய இடங்களில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி வேண்டி மொகலாய மன்னர்களை அணுகினர். மொலகாய மன்னர்களும் வியாபாரத்துக்குத்தான் ஆங்கிலேய வியாபர்ரிகளை அனுமதித்தனரே யல்லாது அரசியல் தோல்வி அடைவதற்கன்று.

ஆனல், ஆங்கிலேய வியாபாரிகள் இந்தியாவுக்குச் சென்ற காலம், மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியிலே முக்கியமான ஒரு காலமாகும். ஆங்கிலேயர் மட்டுமல்ல, போர்த்துக்கீசியரும், பிரெஞ்சுக்காரரும் தங்கள் பொருள்களை விற்பனை செய்யப் புதிய நாடுகளைத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, அவர்களும் இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள்தான் ஆங்கிலேய வியாபாரிகளைத் தோற்கடித்து வியாபார வெற்றி அடைய விரும்பினர். இதற்குச் சாதகமாக இருந்தது இந்தியா தேசம்.

இந்தியா என்றுமே ஓர் அரசியலின் கீழ் இருந்ததில்லை. பேருக்கு ஒரு மொகலாய மன்னர் டில்லியில் இருந்தாரே அல்லாமல், சட்டமும், போக்குவரத்தும் தேசத்தை ஒரு பலமான மத்திய அரசாட்சியின் கீழ் என்றுமே கொண்டுவந்ததில்லை. ஆகவே, பல சிற்றரசர்கள் தங்கள் தங்கள் பகுதிகளில் செல்வாக்குப்பெற்று விளங்கினர். இந்த அரசியல் பலவீனம், வியாபாரத்துக்காகச் சென்ற வியாபாரிகளின் முன்னேற்றத்துக்கும், போட்டிக்கும் சாதகமாக இருந்தது. ஆகவே, ஆங்கிலேய வியாபாரிகளின் முதல் போராட்டம் எல்லாம் தங்கள் எதிரிகளான பிரெஞ்சு, போர்த்துக்கீசிய வியாபாரிகளைத் தோற்கடித்துத் தங்கள் வியாபாரத்தைப் பாதுகாக்க

வேண்டியதேதான். இதனால் தான் முதல் போராட்டங்களில் ஆங்கிலேயருக்கு உதவியாக இருந்த பெரும்பான்மைப் போர்வீரர்கள் இந்திய மக்கள். ஆங்கிலேய வியாபாரிகள் அப்போது ஆங்கிலேயப் படைப்பலம் ஏதுமின்றியே போராடினர். இதைக் கிளைவ் என்பவரின் வாழ்க்கை மூலம் அறியலாம். கிளைவ் ஒரு வியாபார ஸ்தாபனத்துக்குக் குமஸ்தாவாகத்தான் சென்றானேயல்லாமல், பெரிய தளபதியாகும் நோக்கத்தோடு அன்று. ஆகவே, ஆங்கிலேய வியாபார ஸ்தாபனமான ஈஸ்ட் இந்தியா கம்பெனி இந்தியாவில் வெற்றியடைந்தது ஆங்கிலேய சாம்ராஜ்ய வேட்கையால் அன்று; பிரெஞ்சு, போர்த்துக்கீசிய வியாபாரிகள் அடைந்த தோல்வியால்தான்.

ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் முயற்சிகள் தோல்வியடைந்திருக்குமானால், இந்தியா சாம்ராஜ்யப் பிடிப்பிலிருந்து சுதந்திரமாக வாழ்ந்திருக்கும் என்று சொல்ல முடியாது; பிரெஞ்சு அல்லது போர்த்துக்கீசிய சாம்ராஜ்யத்திற்கு அடிமைப்பட்டிருக்கும்; அவ்வளவுதான். ஏனெனில், இந்திய அரசியல் பலவீனமடைந்திருந்தது. பிரெஞ்சுக்காரரையும், போர்த்துக்கீசியரையும் மட்டிலும் எதிர்க்கும் அளவுக்குக்கூட அதற்குச் சக்தியில்லை என்பதுதான் ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியின் வெற்றிக்குக் காரணம்.

இதே நிலையில்தான், ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் ஆட்சி 1857ஆம் ஆண்டுப் புரட்சியால் பலவீனமாகிவிடும் என்று அஞ்சி, ஆங்கிலேய அரசாங்கத்தின்கீழ் கொண்டுவரப்பெற்ற காரணமும் ஆகும். ஆகவே, ஆங்கிலேய சாம்ராஜ்ய வெற்றி இந்தியாவின் துரதிர்ஷ்டம் அன்று; அந்தத் துரதிர்ஷ்டத்தைப் பிரெஞ்சுக்காரர்களோ அல்லது

போர்த்துக்கீசியர்களோ கொண்டு வந்திருப்பார்கள் என்பதுதான் சரித்திரம் கூறும் படிப்பினையாகும்.

இந்திய அரசியல் அமைப்புப் பலமானதாக இருக்கவில்லை; இந்திய மக்களின் சமய, அரசியல், போக்குவரத்துப் பிரிவுகள் அவர்களைப் பல வகைகளிலும் பிரித்து வைத்திருந்தன. இந்தப் பலவீனமும் அவர்களின் தோல்விக்குக் காரணம்.

ஆனால் ஆங்கிலேயர் ஆட்சி வலுவடைந்தபோது இந்தியா எவ்வகையில் வளர்ச்சி அடைந்தது? முதன்முதலில் இந்தியாவில் ஐ. சி. எஸ். அதிகாரிகள் அனைவரும் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர். ஆனால், பல போராட்டங்களின் காரணமாக ஐ. சி. எஸ். உத்தியோகங்களை ஆங்கிலேயர் மட்டுமே வைத்திருக்க முடியாமல் போயிற்று. ஆகவே படிப்படியாக இந்தியர்களையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் இந்திய மகாராஜாக்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்கு மிகவும் சாதகமாக இருந்தனர். ஆகவே, ஆங்கிலேய அரசாங்கம் இந்தியாவில் வெற்றியோடு இருக்க முடிந்தது. ஏனென்றால், பல மகாராஜாக்கள், ஆங்கிலேய அரசாங்கத்தின் படைப்பலத்தாலேயே தங்கள் எதிரிகளைத் தோற்கடித்துத் தாங்கள் மகாராஜாக்கள் ஆக முடிந்தது. ஆனால் மகாராஜாக்கள் என்றுமே ஒற்றுமையாக இருந்ததில்லை. 1935ஆம் ஆண்டில் அவர்களுக்கென ஒரு தனிப் பார்லிமெண்டு ஏற்படுத்த ஆங்கிலேய அரசாங்கம் முயன்றது. ஆனால் மகாராஜாக்கள் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர். இதனால் அவர்கள் எதிர்காலம் மோசமானதை அவர்களே எதிர்பார்க்கத் தவறிவிட்டனர். அந்த யோசனையை மகாராஜாக்கள் ஒன்று சேர்ந்து ஏற்றிருப்பார்

களேயானல், பின்பு ஏற்பட்ட இந்திய அரசியல் மாற்றங்கள் இன்றுள்ளதைப் போன்று அல்லாமல், மகாராஜாக்களுக்கென்றும் தனியான அரசியல் சட்டங்கள் ஏற்படுத்த நேரிட்டிருக்கும். ஆகவே, மகாராஜாக்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்குச் சாதகமாக இருந்தனர் எனினும், அவர்கள் தங்கள் நீண்டநாளேய நலனேத் தாங்களே யோசித்து அறியும் அளவுக்கு ஒன்றுபட்டிருந்தனர் என்று சொல்ல முடியாது. இதனுல் ஆங்கிலேயர் ஆட்சிக்குத் தீமை ஏதும் ஏற்படவில்லே. என்ருலும், பொதுமக்களின் சுதந்திர வேகத்தை மகாராஜாக்களின் தோல்வி அதிகப்படுத்தச் சாதகமாக இருந்தது.

ஒரு முறை இந்திய மக்கள் சுதந்திரம் அடையவேண்டும் என்று உணர்ந்துவிட்டார்கள் என்பதை ஆங்கிலேய அரசாங்கம் அறிந்தபோது, இந்தியாவுக்கு எவ்வாறு அதிகாரத்தை மாற்றுவது என்பது பற்றி இங்கிலாந்தில் தீவிரமாகப் பேச்சுத் தொடங்கிவிட்டது. காந்தியடிகள் முதலில் கிரிப்ஸ் தூதுக் கோஷ்டியை ஏற்க மறுத்துவிட்டார். ஆனுல் அதோடு அவர் நின்றுவிடவில்லே. காங்கிரஸ் கட்சியையும் கிரிப்ஸ் தூதுக் கோஷ்டியுடன் வெற்றியடைய விடவில்லே. காந்தியடிகள் காங்கிரஸ் கட்சியின் தலேவர் என்ற முறையில் பேசியிருந்தால், கிரிப்ஸ் தூதுக்கோஷ்டிக்குத் தொல்லே இருந்திருக்காது. ஆனுல் காந்தியடிகள் இந்திய மக்களிடையே அளவிலாச் செல்வாக்குக் கொண்டு விளங்கியதால் கிரிப்ஸ் தூதுக் கோஷ்டியினர் காந்தியடிகளின் வார்த்தைகளேக் கவனமாக ஏற்க வேண்டி வந்தது. ஆகவே கிரிப்ஸ் தூதுக் கோஷ்டி இந்தியாவில் மூன்று விதமான கருத்துக்களே ஆராய்ந்து பார்க்க வேண்டி நேர்ந்தது. ஒன்று காந்தியடிகளின் தனியான கருத்து; இரண்டு, காங்கிரஸ் கட்சி

யின் பொதுவான கருத்து; மூன்று, முஸ்லிம் லீக் தலைவரான ஜின்னாவின் கருத்து.

காங்கிரஸ் தலைவராக இருந்த அபுல் கலாம் ஆசாத் காந்தியடிகளின் கருத்துக்கு மாறாக ஒரு பொதுவான கருத்தை வலியுறுத்திக் கொண்டிருந்தார். இதனை அவர் காலமாகுமுன்னர் எழுதிவைத்த புத்தகத்தில் காணலாம்.

முதலில் முஸ்லிம் லீக், பலமில்லாத ஒரு ஸ்தாபனமாகத்தோன்றியது. ஆனால் இந்தியாவுக்கு அதிகாரத்தை மாற்றப்போகிறார்கள் என்பதை அறிந்தவுடன், இந்தியர்களிடையே முன்பு இருந்த ஒற்றுமை குலையத் தொடங்கி விட்டது.

ஒரு தடவை நாங்கள் முடிவு செய்து விட்டோம். ஆனால் காந்தியடிகளும், காங்கிரசும், முஸ்லிம் லீக்கும் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டார்கள். ஆனால் நாங்கள் இதுபற்றி வருத்தப்படவில்லை. அரசியல் விஷயத்தில் தனி மனிதனுடைய வருத்தமும், சந்தோஷமும் முக்கியமல்ல; ஒரு சமூகமாக, ஒரு சமுகப் பிரச்னையாக வெளிவரும் கருத்துக்களை அந்நியர்களாகிய நாங்கள் இது உயர்ந்தது, இது தாழ்ந்தது என்று ஏற்று நடக்க முடியாது. ஆகவே தான் நாட்டைப்பிரிப்பதற்கு நாங்கள் சம்மதித்தோம்.

"நாட்டைப் பிரிக்கக்கூடாது; இன்னும் சில நாட்கள் சுதந்திரப் பிரச்னையைத் தள்ளிப் போட்டால் இந்தியர்கள் ஒற்றுமைப்படுவார்கள்" என்று கருதிய தலைவர்கள் சிலர். இந்தியர்களிலே முக்கியமானவர் அபுல் கலாம் ஆசாத். ஆங்கிலேயர்களில் முக்கியமானவர் லார்டுவேவல். ஆனால் லார்டு வேவலின் யோசனை பல பிரச்னைகளை

எழுப்பும் என்று கருதிய ஆங்கிலேய அரசாங்கம் அவரைத் திரும்ப அழைத்துவிட்டது. பிரிவினையைத் துரிதப் படுத்துவதற்காகவே லார்டு மவுண்ட்பாட்டனை அனுப்பிற்று.

அபுல் கலாம் ஆசாத்தின் காங்கிரஸ் தலைமை ஜவஹர்லால் நேருவுக்குச் சென்றது. அது பல மாற்றங்களை இந்தியச் சரித்திரத்தில் உண்டாக்கியதை, அபுல் கலாம் ஆசாத்தின் சுய சரிதத்தில் காணலாம்.

கற்பனை

கற்பனை வேகம், பயன் தரக்கூடிய முறையில் சென்றால் மனிதனுக்கு ஊக்கம் தரும்; பயனற்ற வழிகளில் சென்றால் வீண் மனோராஜ்யமாகும்.

கற்பனா சக்தியையும் சிந்தனையையும் பயனற்ற விஷயங்களிலும் முறைகளிலும் செலுத்தினால், சோம்பலும், தூக்கமும் வளரும்.

—ராஜாஜி

ஜெர்மன் அற்புதம்

ஜெர்மனியின் பொருளாதார ஊனத்தைக் குணப் படுத்தவே முடியாது என்று எல்லோரும் நினைத்த கால மொன்று உண்டு. 1948 ஆம் ஆண்டுக்கு முந்தின வருஷங்களில் இந்த மாதிரி ஒரு கருத்துத்தான் எங்கும் பரவியிருந்தது. போரில் நாசமுற்றுத் தரை மட்டமாகி யிருந்த நாடு ஜெர்மனி. போர் முடிந்தவுடன் நாடு இரண்டு பட்டது. சர்வ நாசமுற்றிருந்த அந்த நாடு பத்தே ஆண்டுகளுக்குள், போருக்கு முந்தைய மிகச் சிறப்பான உற்பத்தியளவையும், வாழ்க்கைத் தரத்தை யும், மற்றப் பொருளாதாரச் சாதனைகளையும் கூட மிஞ்சி விடும் நிலைக்கு உயர்ந்துவிடும் என்று யாரும் 1945 ஆம் ஆண்டில் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். ஒரு துறை யிலா, இரண்டு துறைகளிலா—ஒவ்வொரு துறையிலும் ஜெர்மனி மீட்சியடைந்தது; வீடு வசதி, ஆலைத்தொழில் வேலை வாய்ப்பு, போக்கு வரத்து, தகவல் 'தொடர்பு' சமூகப் பணிகள்—இப்படி ஒவ்வொரு துறையிலும் ஜெர்மனியின் சீரமைப்பு அற்புதமானது. தனதென்று சொல்லிக் கொள்வதற்கு எதுவுமே மிஞ்சாத நிலையி லிருந்த ஜெர்மனி, வேறெந்த நாட்டின் பொருளாதாரச் சிறப்புக்கும் சளைக்காத நிலை ஒன்றிற்கு உயர்ந்து விட்டது. இந்தப் பெரும் மாறுதலைத்தான் சிலர் "ஜெர்மன் அற்புதம்" என்று சொல்லுகிறார்கள்.

இரண்டாவது உலகப்போரின் முடிவில் ஜெர்மனி இருந்த அவல நிலைமையை வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஜெர்மனியின் நாணயமான மார்க்

(ஒரு மார்க் என்பது சுமார் ஒரு ரூபாய் பன்னிரண்டு நயா பைசா) செலாவணி மதிப்பிழந்து நின்றது. பொருளாதாரம் அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தப் பொருளாதாரக் கட்டமைப்பில் எவருக்கும் வருஷத்துக்கு ஒரு முட்டை தான் கிடைக்கும்; ஒரு அவுன்ஸ் வெண்ணெய்க்கு ஒரு வாரம் காத்திருக்க வேண்டும்; கள்ள வியாபாரம் தலை விரித்தாடியது. பங்கீட்டுச் சீட்டில் போட்டிருக்கும் விலையைப் போல நூறு மடங்கு விலை கொடுத்துத்தான் கள்ளமார்க்கெட்டில் ஒரு சிகரெட் வாங்கமுடியும். ரயில் நிலையத்தில் போர்ட்டர் எவனும் ஒரு சிகரெட்டுக்காக எவ்வளவு சுமையையும் தூக்குவதற்குத் தயாராக இருந்தான். உணவெல்லாம் பங்கீட்டு முறைக்கு இலக்காகியிருந்தது. பசி யெடுக்கும் பகல் வேளையில் வேண்டுமென்றே தூங்கி, தமது பங்கீட்டு உணவைக் கள்ள மார்க்கெட்டில் விற்றுப் பணம் சேர்த்தவரும் உண்டு. கோழி வளர்த்தவர்கள் ஒரு முட்டைக்கு கொள்ளை விலை கோரிய காலம் அது.

வெறும் யந்திரம் போல் புள்ளி விவரம் சேகரித்தவர்கள் சில பயங்கரமான புள்ளி விவரங்களை வெளியிட்டார்கள். அன்றைய நிலையில், ஜெர்மானியர் ஒருவருக்கு ஒரு சாப்பாட்டுத் தட்டு கிடைப்பதற்கு ஐந்து வருஷமாகும், ஒரு ஜோடி பூட்ஸ் கிடைப்பதற்குப் பன்னிரண்டு ஆண்டுகள் பிடிக்கும், ஐம்பதாண்டுகளுக்கு ஒரு முறைதான் ஓர் உடை கிடைக்க முடியும், ஏன் இறந்துபோகும் மூன்றில் ஒருவருக்குத்தான் தனிச் சவப் பெட்டி கிடைக்க முடியும்—என்றெல்லாம் அவர்கள் விவரம் கொடுத்தார்கள்.

ஆனால் அவர்கள் கணக்கிட்டது தவறாகிவிட்டது. அப்போதிருந்த பொருளாதார நிலையை வைத்துக்

கொண்டு, நெடுங்காலம் ஒன்றிற்கு அவர்கள் ஊகித்துச் சொன்னர்கள்; சுதந்திரத்தின் அருமை பெருமையை மறுபடி உணர்ந்துகொண்டு விட்ட சமுதாயம் ஒன்று மனம் வைத்தால், மாபெரும் முற்போக்குச் சக்திகள் வெளிப்பட முடியும் என்பதை அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

ஜெர்மனியில் கட்டுப்பாடு செலுத்தி வந்த அமெரிக்க, பிரிட்டிஷ் அதிகாரிகள் 1948 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மார்க் செலாவணியின் மதிப்பைத் திருத்தி விதித்தபின், பொருளாதார ஆலோசகர் டாக்டர் லுட்விக் எர்ஹார்ட், உணவுப் பங்கீட்டு முறையையும் விலைக் கட்டுப்பாடுகளையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தாம் ஓர் உத்தரவு பிறப்பித்திருப்பதாக அறிவித்தார். "மக்களையும், பணத்தையும் தன் போக்கில் விட்டுவிடுவோம்; நாடு வலிமை பெறும்" என்பது அவர் சித்தாந்தம்.

மார்க்கெட் பொருளாதார முறை அமலுக்கு வந்தது. செலாவணிச் சீர்திருத்தத்தையடுத்து வரவேண்டிய திட்டமிடும் நடவடிக்கைகளுக்கும், விலைக் கொள்கைக்கும் நெறிகள் விதிக்கும் சட்டம் அறிவிக்கப் பெற்றது. கட்டுப்பாடுகளும், விலைகளும் விதிப்பதற்கெனப் பிறப்பிக்கப் பெற்றிருந்த நூற்றுக்கணக்கான உத்தரவுகளை குப்பைக் கூடையில் போடுவதற்கான அதிகாரம் டாக்டர் எர்ஹார்டுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் கிடைத்தது.

இவ்வாறு சுயேச்சை மார்க்கெட் பொருளாதாரத்தில் ஒரு துணிச்சலான சோதனை ஆரம்பமாயிற்று. பெருநாசத் தோல்வி யொன்றில் சிக்கிய பின் 15 ஆண்டு

களுக்குள்-அதாவது 1960-ஆம் ஆண்டில்-ஜெர்மனி இந்த துணிச்சலான சோதனை மூலம், அமிதப் பணப் புழக்கக் கஷ்டம் நிறைந்த ஓர் உலகத்தில் நிலையான பொருளாதாரம் கொண்ட வன்மையான நாடுகளில் ஒன்ருகி விட்டது.

போருக்கு முந்தைய மிகச் சிறப்பான அளவைப் போல இரண்டரை மடங்கு அதிகமாக ஜெர்மனி இப்போது உற்பத்தி செய்கிறது. செலாவணிச் சீர்திருத்தத்துக்குப் பிறகு ஆலைப் பொருள் உற்பத்தி ஆறு மடங்காகப் பெருகியிருக்கிறது. ஜெர்மனி இப்போது ஆண்டு தோறும் ஏற்றுமதி செய்யும் பண்டங்களின் பெறுமானம் 4,000 கோடி ரூபாயாகும்.

தாம் மந்திரம் ஏதும் செய்துவிடவில்லை என்று டாக்டர் எர்ஹார்ட் சொல்லுகிருர். நவீன தேசியப் பொருளாதாரத்தின் நெறிகளைத்தான் அவர் செயலில் நிறைவேற்றிக் காண்பித்தார்; வேருென்றுமில்லை. கட்டுப்பாடற்ற தாராளப் பொருளாதார முறைக்கும், உணர்ச்சியற்ற அரசாங்கக் கட்டுப்பாட்டு முறைக்கும் நடுவழியாக இந்த நவீன முறையையே மேற்கத்திய நாடுகள் அனைத்தும் பின்பற்றுகின்றன. கட்டுப்பாடில்லாத அதிகச் சுதந்திர நிலைக்கும், கட்டுப்பாடு மிக்க சர்வாதிகார முறைக்கும் இடையேயுள்ள சரியான நடுவழி இது.

ஜெர்மனியின் பொருளாதார விவகாரங்களை நிர்வகிக்கும் பொறுப்பை டாக்டர் எர்ஹார்ட் ஏற்றுக்கொண்ட போது, நிலைமையை மறுபரிசீலனை செய்தார். தனி நபரின் தன் முயற்சித் திறன் சுயேச்சையாக வளர்வதற்கு இடமளிக்க வேண்டுமானல் தேசத்தின் சக்தி முழுவதையும் விடுவித்து விடவேண்டும் என்று அவர் கருதினர். ஆகையால் கட்டுப்பாடுகள் அனைத்தையும் எடுத்து

விடுவதென்று அவர் தீர்மானித்தார். இந்தத் துணிச்சலான தீர்மானத்தை ஜெர்மனியின் மந்திரிசபை எதிர்த்தது. ஆனால் டாக்டர் எர்ஹார்ட் தமது நிலையை விளக்குகையில், சில மாதங்களுக்கு மேற்பரப்பில் குழப்பம் இருப்பது போலத் தோன்றினாலும், அந்த விளைவை நாடு சமாளித்துத்தான் ஆகவேண்டும் என்றும், இதன் மூலம் பிறக்கும் ஊக்கத்தால் நாடு முழுவதும் உழைப்புக்கும், உற்பத்திப் பெருக்கத்துக்கும் ஆயத்தமாகிவிடும் என்றும் கூறினார். "மார்க்கெட்டில் பண்டங்கள் அதிகமாயிருந்து, பணியும் சீராகிவிட்டால் நிலைமை மாமூலாகி விடுகிறது. ஆகவே நாட்டின் பொதுவானக்ஷேமத்தைக் கருதி இதை செய்யத்தான் வேண்டும்" என்று அவர் வற்புறுத்துகிறார். "கட்டுபாடுகளை நீக்கினால், ஜெர்மன் மக்கள் அனைவரின் மனத்திலும், அதிகமாய் உழைத்து அதிகப்பலன் பெறுவதற்கு ஊக்கம் பிறக்கும்" என்று அவர் வாதித்தார். அவர் சொன்னபடியே நடந்தது.

"கள்ள மார்க்கெட் திடீரென்று மறைந்துவிட்டது. கடைகளிலெல்லாம் பண்டங்கள் குவிந்தன; ஆலைகள் முழு வீச்சில் இயங்க ஆரம்பித்தன; வீதிகளிலெல்லாம் சாமான் லாரிகள் விரைந்தோடின. நாச முற்றிருந்த கட்டிடங்களின் அமைதி மாறி, புதுக்கட்டிடங்கள் மேலே கிளம்பும் சத்தம் கேட்க ஆரம்பித்தது. நாடு மீட்சியடைந்ததுகூட விந்தையல்ல; அந்த மீட்சியின் வேகம் இருக்கிறதே, அதுதான் விந்தையிலும் விந்தை. செலாவணிச் சீர்திருத்தம் அமலுக்கு வந்த நாள் முதல் பொருளாதாரத்தின் எல்லாப்பிரிவுகளிலுமே இந்த மீட்சி ஆரம்பமாகிவிட்டது. செலாவணிச் சீர்திருத்தத்தின் விளைவாகப் பண்டங்களின் அளவும், வகைகளும் எப்படித் திடீரென்று பெருகின என்பதை, நேரில் பார்த்தவர்கள்

தான் சொல்லமுடியும். கடைகளிலெல்லாம் பண்டங்கள் நிறைந்து விட்டன; ஆலைகளெல்லாம் முழு வீச்சில் இயங்க ஆரம்பித்தன. செலாவணிச் சீர்திருத்தத்துக்கு முன்பெல்லாம் மக்கள் தமக்கு மேற்கொண்டு ஏதாவது பண்டம் கிடைக்காதா என்று தேடியவண்ணம் அலைந்து கொண்டிருந்தார்கள். சீர்திருத்தத்துக்குப் பிறகோ அவர்கள் பண்டங்களின் உற்பத்தியைத் தவிர வேறெதை யும் நினைக்கவில்லை. முதல் நாள் அவர்களுடைய முகத்தில் வெறுப்பும், நிராசையும் இருந்தன; ஆனால் மறுநாள் ஜெர்மனி முழுவதிலும் நம்பிக்கை படர்ந்து விட்டது'' என்று ஜெர்மனியில் தங்கியிருந்த இரண்டு பிரெஞ்சுக் காரர்கள் வர்ணித்தார்கள்.

எதிர் பார்த்தது போல், முதலில் கொஞ்ச நாட்களுக்குக் குழப்பம் இருக்கத்தான் செய்தது; ஆனால் சீக்கிரமே தனி நபரின் ஆக்க முயற்சியும், ஆர்வமும் குழப்பத்தை ஒழித்துவிட்டன; பண்டங்கள் பெருமளவுக்கு உற்பத்தியாகத் தொடங்கின. அமெரிக்கா கொடுத்த கடன்கள்—முக்கியமாய் மார்ஷல் திட்டத்தின் மூலம் கிடைத்த தொகைகள்–இதற்குப் பெரிதும் உதவியாய் இருந்தன என்பது உண்மையே. ஆனால், சொந்த முயற்சியும், ஆர்வமும் காட்டிக் கொண்டு முன்வரும் எவருக்கும் ஜெர்மன் அரசாங்கம் பணம் கொடுத்து உதவியது. இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு அவர்கள் நாட்டை வளப்படுத்தித் தாமும் நன்மை அடைந்தார்கள். பார்க்கப்போனால் ஓர் எளிய பொருளாதார நெறிதான்; தனி நபரின் சொந்த முயற்சி, அதற்கு அரசாங்கம் அளிக்கும் ஊக்கம். ஆனால் இந்த நெறியினால் நாடும், மக்களும் அடைந்த நன்மையை அளவிட முடியாது.

டாக்டர் எர்ஹார்டின் சிந்தாந்தத்துக்கான அடிப்படை எளிமையானது. "வளம் பெற்று, அதைத் தக்கபடி வைத்துக்கொள்ள வேண்டுமானால் தொழிலில் போட்டி இருக்கவேண்டும். போட்டி மூலம் தான் பொருளாதாரம் விரிவடைய முடியும். போட்டி மூலம் தான் உற்பத்திப் பெருக்கத்தின் நற்பலன்கள் மக்களை எட்ட முடியும். சுயேச்சையான போட்டி மூலம் சமூக முறைமை முழுவதுமே முன்னேறி நலன் காண முடியும்."

மார்க்கெட் பொருளாதாரம் என்பது எல்லா மக்களின் வாங்கும் சக்தியையும் விரிவாக்கும்வகையில் திட்டமிடப்பெறுகிறது. மேலாகச் சிலர் மட்டும் பணம் படைத்திருந்து, மற்றவர்கள் அற்பமான வாங்கும் சக்தியுடன் தவித்துக் கொண்டிருக்கும்படியான பழைய சமூக முறைமை போய்விட்டது. ஜெர்மனியில் எல்லோருடைய வாங்கும் சக்தியையும் பெருக்குவதில்தான் தமது பொருளாதாரச் சித்தாந்தத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது என்பதை டாக்டர் எர்ஹார்ட் கண்டு கொண்டார். வாங்கும் சக்தி பெருகினால் வாழ்க்கைத்தரம் பெருகும். இதற்காக அவர் சம்பளத்தை உயர்த்த விரும்பவில்லை; சம்பளம் மட்டும் உயர்ந்தால் அதிகப் பணப் புழக்கம் ஏற்பட்டு விலைப் பளு பொது மக்களைத்தான் இறுதியில் அழுத்தும் என்பதை அவர் அறிவார். போட்டி மூலம் விலைகளைக் குறைத்து, உற்பத்தியைப் பெருக்கி, லாபத்தை மட்டுப்படுத்தி விற்பனையை அதிகமாக்கினால் இந்த லட்சியம் கைகூடிவிடும் என்று அவர் திட்டமிட்டார். சிறிய அப்பம் ஒன்றை வைத்துக் கொண்டு அதை எப்படிப் பகிர்ந்து கொள்வதென்று வாதாடிக் கொண்டிருப்பது வீண் காரியம் என்றும், பெரிய அப்பம் ஒன்றை வைத்துக்கொண்டு நேரடியாகப் பகிர்ந்தால் எல்லோருக்கும் பெரிய பங்கு கிடைக்கும் என்றும் அவர் வற்புறுத்துகிறார்.

ஓய்வுநேரம்

அமெரிக்கர் தம் ஓய்வு நேரத்தை எவ்வாறு கழிக்கின்றனர்? அமெரிக்காவில் ஓய்வு நேரம் அதிகமாகிக் கொண்டே போகிறது. இயந்திரங்களும் உற்பத்திப் பெருக்கமும் அதற்குக் காரணம்.

ஓய்வு நேரத்தை அமெரிக்கர் ஆழ்ந்த சிந்தனையிலும், இலக்கிய ஆராய்ச்சியிலும் கழிப்பதில்லை. தத்துவக் கலைஞரின் இலட்சிய நிலையில் நின்று நோக்கினால், இது குறித்து வருந்தவேண்டும்.

ஆனால், மனிதரின் இயல்புக்கு இணங்க, சராசரி அமெரிக்கர் தம் ஓய்வு நேரத்தில் விளையாடுகின்றனர். அவர்கள் மலையேறுவதும், தேசியப்பூங்காக்களில் சுற்றித் திரிவதும், மீன் பிடிப்பதும், கோல்ப் ஆடுவதும், நீந்துவதும், இவை போன்ற பிறவும் முக்கியமானவை. இவையெல்லாம் வெளியிடங்களில் ஆடும் உடல் உழைப்பு மிக்க ஆட்டங்களாகும். அமெரிக்கரின் முன்னோர் முதலில் குடியேறிய காலத்தில் அவர்களிடம் காணப்பெற்ற பண்புக்கு இது பொருந்துவதாகும்.

அறிவியல் ஈடுபாடு

ஓய்வு நேரமெல்லாம் அமெரிக்கர் விளையாடுகின்றனர் என்று சொல்லமுடியாது. இந்த வெயில் காலத்தில் 20 லட்சம் அமெரிக்கர் கலை நிலையங்களுக்குச் செல்வர். அங்கு பாடலும் ஆடலும் நடைபெறும். பலர் பயிற்சிக் கூடங்களுக்குச் சென்று கதைகள் எழுதுவர்; கவிதைகள் புனைவர்; மட்கலங்கள் செய்வர்.

வயது வந்தவர்கள் ஓய்வு நேரத்தில் படிப்பதற்கு வசதிகள் உள்ளன. அரும் பொருள் களஞ்சியங்களுக்கும் நூலகங்களுக்கும் ஓய்வு நேரங்களில் செல்வோர் உளர். வேறுவகை பண்பாட்டுச் செல்வங்களையும் அமெரிக்கர் அனுபவிக்கின்றனர்.

கலையின்பப் பொழுது போக்குக்காக ஓர் ஆண்டு அமெரிக்கர் எவ்வளவு செலவு செய்கின்றனர்? புத்தகங்களுக்காக 600 கோடி ரூபாய்; சஞ்சிகைகளுக்காக 1000 கோடி ரூபாய்; இன்னிசைத் தட்டுகளுக்காக 40 கோடி ரூபாய்; நாடகங்கள், இசையரங்குகள் முதலியவற்றிற்காக 150 கோடி ரூபாய்; கலைப் பொருள்களுக்காக 9 கோடி ரூபாய்.

இவ்வளவு ஓய்வு கிடைப்பதால் ஒவ்வொருவருக்கும் தமது அறிவை வளர்ப்பதற்கு வாய்ப்புள்ளது அந்த வாய்ப்பைப் பயன் படுத்துவதைப் பொறுத்ததே அமெரிக்க நாகரிகத்தின் எதிர்கால வாழ்வு.

பிரதேச ஆராய்ச்சி

முதலாவது எலிசபெத் ராணியின் ஆட்சியில் நடந்ததுபோலவே இன்றுகூடப் பிரிட்டிஷ் மக்கள் பிரதேச ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். காலத்திற்கேற்றபடி ஆராய்ச்சி முறைகள் மாறியிருக்கலாம். ஆனால் மக்களுடைய ஆர்வம் மாறவில்லை. புதிய நாட்டைக் கண்டுபிடிக்கவேண்டும், புதிய பகுதிகளை ஆராயவேண்டும் என்ற விழைவு நீடித்து வருகிறது. இந்த ஆர்வம்தான், எவரெஸ்டு சிகரத்தின் மீதேறத் தூண்டுகோலாக இருந்தது. 1953 ஆம் ஆண்டில் ஹில்லாரியும் டென்ஸிங்கும் எவரெஸ்டு சிகரத்தை எட்டிப் பிடித்தனர்.

உலகில் மனிதன் கண்டறியாத-கண்டும் ஆராய்ந்து தெரிந்துகொள்ளாத பாலைப் பிரதேசங்களும் பனிமிகுந்த வெளிகளும் ஆழ்கடல் பரப்புக்களும் உண்டு. பாலை வனங்களிலும் பனிமிகுந்த வெளிகளிலும் பிரிட்டிஷாரின் அடிச்சுவட்டைக் காண முடியும். பிறநாட்டினருக்கு வழி காட்டும் முறையில் பிரிட்டிஷ் மக்கள் ஈடுபட்ட நிகழ்ச்சிகளும் உண்டு. அரேபியாவை ஆராயப் பெட்ராம் தாமஸ் சென்றார். தென்துருவ மண்டலத்தை ஆராய டாக்டர் புஷ்ஷும், ஸர், எட்மண்டு ஹில்லாரியும் போனார்கள். ஸிம்ஸனும் அவருடைய சகாக்களும் கிரீன்லாந்துப் பிரதேச ஆராய்ச்சியில் கவனம் செலுத்தினார்கள்.

விஞ்ஞான வளர்ச்சியால் பல மாறுதல்களைக் காண்கிறோம். நேற்றுக் கடிதாகத்தோன்றியது இன்று எளி

தாக மாறிவிடுகிறது. சென்ற தலைமுறை மக்கள், செய்ய முடியாத காரியத்தை இன்றைய மக்கள் சுலபமாகச் செய்கிறார்கள். தென்துருவ மண்டலத்தை ஆராய ஸ்காட்டும், ஷாக்கிள்டனும் எடுத்துக்கொண்ட முயற்சிக்கும், டாக்டர் புஷ்ஷும், ஹில்லாரியும் எடுத்துக் கொண்ட முயற்சிக்கும் வேற்றுமையுண்டு பிரயாண வசதிகள் பெருகப் பெருக, பிரதேச ஆராய்ச்சியிலுள்ள கஷ்டங்கள் குறைகின்றன. தனி மனிதன் காடு மலைகளைக் கடக்க பல தினங்களாகலாம். ஆனால் ஒரு விமானம் சில மணி நேரத்தில் அந்தப் பயணத்தை முடித்துவிடும். ஆயினும் தனியார் முயற்சி இல்லாமல் இல்லை. சார்லஸ் டௌடியின் வழியைப் பின்பற்றி வில்பிரட் தெசிகர் என்பவர் அண்மையில் தெற்கு அரேபியாவிலும் அபிசீனியாவிலும் சுற்றித்திரிந்தார். பிரேயா ஸ்டார்க் என்பவர் ஆசியா மைனர் பிரதேசத்தில் பிரயாணம் செய்தார்.

தனி மனிதனை விட ஒரு குழுவினர் பிரதேச ஆராய்ச்சியிலீடுபட்டால் செலவும் சிக்கனமாகும், தகவல்களையும் அதிகமாகச் சேகரிக்க முடியும். கேம்பிரிட்ஜைச் சேர்ந்த ஜைன் வாட்கின்ஸ்தான் முதல் முதலாக குழு அமைத்து ஆராய்ச்சியிலீடுபட்டார். 1930 ஆம் ஆண்டில் ஒருநாள், அவர், பதினான்கு இளைஞர்களுடன் பிரதேச ஆராய்ச்சிக்காக கிரீன்லாந்துக்குச் சென்றார். அவர்கள் எஸ்கிமோக்களைப்போலப் படகுகளைச் செலுத்தவும் நாய் வண்டிகளை ஓட்டவும் கற்றுக்கொண்டார்கள். விஞ்ஞானத் தகவல்களைச் சேகரிக்கப் புது முறைகளைத் தயாரித்துக் கொண்டார்கள். வாட்கின்ஸ் வகுத்துத்தந்த முறைகளையே பிற்காலத்தில் பிரதேச ஆராய்ச்சியிலீடுபட்ட ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்டார்கள். இளைஞர்கள் நிறைந்த குழு, உறுப்பினருக்கு பல்தொழில் பயிற்சி,

சிக்கனம், தொடர்ந்து பிரயாணம் இவற்றில் வாட்கின்ஸ் தனிக்கவனம் செலுத்தினர். அவர் வகுத்த வழியில் அமைந்த ஓர் குழு 1934 ஆம் ஆண்டில் தென்துருவ மண்டலத்திற்குச் சென்று வெற்றியுடன் திரும்பிற்று. ஜான் ரிமில் என்பவர் தலைமையில் 14 பேர் அடங்கிய ஓர் குழு கிரஹாம்லாந்து தீபகற்பத்திற்குப் பிரயாண மானார்கள். அங்கு அவர்கள் இரண்டு பனிக் காலத்தை யும் மூன்று கோடைக்காலத்தையும் கழித்தார்கள். குழுவினர் டெபன்ஹாம் தீவுகளில் இரண்டாம் தளத்தை அமைத்துக்கொண்டபோது ஒன்பது பேர் நாய் வண்டி களில் நீண்ட தூரம் சென்று, பிரதேசத் தகவல்களைச் சேகரித்தார்கள்.

சுமார் இருபதாண்டுகளுக்குப் பிறகு டாக்டர் புஷ் வாட்கின்ஸ் முறையில் செயல்த்திட்டம் வகுத்துகொண்டு தென்துருவ மண்டலத்தைக் கடக்கச் சென்றார். பல் வகைப் பொறுப்புக்களை ஏற்கக்கூடிய பன்னிருவரை அவர் அழைத்துச் சென்றார். விஞ்ஞானத் தகவல்களைச் சேகரிப்பதையே முதற்பணியாகக் கொண்டு, அவர்கள் இரண்டாயிரம் மைல் தூரப் பிரயாணத்தை மேற் கொண்டதால், தூக்கத்தையோ ஓய்வையோ கருதாமல் கடுமையாக உழைக்க வேண்டியதாயிற்று. திறமையும் உறுதியுமிக்க துணைவர்களுடன் சென்ற டாக்டர் புஷ் பல தகவல்களைச் சேகரித்துக் கொண்டு வெற்றியுடன் திரும்பினர்.

இளைஞர்களுக்குப் பிரதேச ஆராய்ச்சியில் ஆர்வ மூட்டுவதற்காக, பிரிட்டனில் ஆங்காங்கு பயிற்சி முகாம் கள் நடத்தப் பெறுகின்றன. பிரதேச ஆராய்ச்சிக் குழுக்களுக்கு பல்கலைக் கழகங்களும் அரசாங்கத்தாரும் ஆதரவு காட்டுகிறார்கள். ராயல் கழகம், ராயல் பூகோளக்

கழகம் போன்ற சங்கங்கள் மான்யவசதிகளைத் தருகின்றன. கேம்பிரிட்ஜிலுள்ள ஸ்காட் போலார் ரிசர்ச் போன்ற நிறுவனங்கள் சிறப்புத் துறைகளில் கவனம் செலுத்துகின்றன.

பிரதேச ஆராய்ச்சிக்கு துணிச்சலும் வீர உணர்ச்சியும் அவசியம். இளைஞர்களுக்கு வீர உணர்ச்சியூட்டுவதில், என்றுங்காணாத முறையில் இன்று முயற்சி உண்டு.

உழைப்பு

உடல் உழைப்பில்லாத எந்த வேலையையும் நான் உயர்வாகக் கருத மாட்டேன். அதோடு, பத்துப் பேரோடு நாம் இம்மாதிரி உழைக்கும் போது, நமக்கே ஓர் உற்சாகம் ஏற்படும். ஆகவே, மனம் பண்படைய உழைப்புச் சிறந்த சாதனமாகும்.

—காந்தியடிகள்

விதியும் மதியும்

வ. அ. தியாகராஜன்

கிரேக்க நாடகங்களுக்கும் இந்திய நாடகங்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. கிரேக்க நாடகங்கள் விதியின் பெருமையைக் காட்டுகின்றன. இந்திய நாடகங்கள் மதியின் பெருமையை விளக்குகின்றன; மதியால் விதியை வெல்லலாம் என்னும் கருத்தைப் புகட்டுகின்றன. ஒரு நாட்டின் மனப்பான்மையை அதன் நாடகத்தின் மூலமும் கலையின் மூலமும் தெரிந்துகொள்ளுகிறோம் என்பது உண்மையானல், இந்த வித்தியாசம் வாழ்க்கையையே அறிய ஒரு தத்துவமாகிறது. மனித வாழ்க்கைக்கு விதி என்பது ஒரு பிடி; மதி என்பது மற்ருெரு பிடி. இந்த இரண்டில் எது சரி, எது தப்பு? இதைச் சற்று ஆராய்ச்சி செய்வோம். முதலில் கிரேக்கர்களுடைய அனுபவத்தையும் கொள்கைகளையும் கவனிப்போம்.

கிரேக்கர்கள் விதி என்பதை மூன்று சகோதரிகளாக உருவகம் செய்து கொண்டார்கள். இவர்கள் மூவருக்கும் பொதுவில் ஒரே ஒரு கண் தான் இருக்குமாம். ஒருத்திப் பார்க்கும் போது மற்ற இருவரும் பார்க்க முடியாதாம். இந்தக் கதையின் கருத்து, விதி ஒரே நோக்கத்தோடு பார்க்கிறது என்பதேயாகும். இந்த மூவரில் ஒருத்தி மனித வாழ்க்கையிலுள்ள சுக துக்கங்களைப் பல வர்ண முள்ள நூலைப் பொறுக்குவது போல் பொறுக்குகிருள். மற்றவள் இந்த நூலை நெய்கிருள். அப்போது மனிதன் சுகத்தையும் துக்கத்தையும் அனுபவிக்கிருன். கடைசியா

னவன் இந்த நூலைக் கத்தரித்து விடுகிறான். அப்போது மனிதன் இறக்கிறான். தங்கள் தேவதைகள் கூட விதிக்கு உள்பட்டவர்கள் என்று கிரேக்கர்கள் கருதினார்கள்.

கிரேக்க நாடகங்களில் விதியின்பெருமை தெளிவாய் எடுத்துக்காட்டப்பெற்றிருக்கிறது. ஸபாக்களிஸ் எழுதிய 'இடிபஸ்' நாடகங்களை எடுத்துக் கொள்வோம். தீப்ஸ் நகரம் ஒரு பெரிய நோயில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது. நோய்க்குக் காரணமானவனைத் தண்டிக்க வேண்டுமென்று அரசன் சொல்லுகிறான். "அவன் யாராயிருந்தாலும் சரி, நானயிருந்தாலும் சரி" என்கிறான். கடைசியாக தன்னையறியாமலே தப்புச் செய்தவன் அரசன் என்று தெரியவருகிறது. அரசன் தன் கண்ணைத் தானே அவித்துக் கொண்டுவிடுகிறான். இதனால் அவன் விதியானது, அதாவது அவன் பிறப்பதற்கு முன்னே சொல்லப் பெற்ற சோதிடவார்த்தை மெய்யாக முடிகிறது. விதியைத் தடுக்க யார் வல்லவர்? இதைத் தடுக்க இடிபஸ் பிறந்தவுடன் அவனைக் காட்டில் விட்டு விடுமாறு அவன் தந்தை உத்தரவிட்டார். அப்படியிருந்தும் தந்தையின் எண்ணம் கைகூடவில்லை. விதிதான் வென்றது. விதியைத் தடுப்பது ஆகாயத்தில் ஓடும் சூரியனைத்தடுப்பது போலாகும்; இது முடியாத காரியம். இதுதான் கிரேக்கர் நினைத்தது. மனித வாழ்க்கை நீர்க் குமிழிபோல் எவ்வளவு சிறியது, எவ்வளவு சீக்கிரம் அழியக் கூடியது என்பதையே அது காட்டுகிறது.

அரிஸ்டாடில் கிரேக்க நாடகங்களின் விதிகளை விதித்தபோது, அவன் ஒரு பெரிய மனிதன், பல நற்குணங்களை உடையவனானாலும், ஏதோ ஒரு சிறு பிழையால் தன்னுடைய உயர்ந்த பதவியிலிருந்து வீழ்கிறான் என்று சொல்லுகிறான். கிரேக்கர் தங்கள் நாடகங்களை

ஒரு விதமான மத விழாவாகக் கருதினார்கள். அவை நற்குணங்களைப் போதிப்பதாகக் கருதினார்கள். அதனால் ஜனங்கள் நாடகங்களைப் பார்ப்பதற்காக அரசாங்கம் அவர்களுக்கு ஒரு நாள் கூலி எவ்வளவோ அவ்வளவு பணம் (அதாவது சுமார் ஆறு அணா) கொடுத்து அனுப்பும். ஒரு நாடகத்தில் மிகவும் நல்லவன் கஷ்டப்பட்டால், தெய்வத்திற்கு கண்ணில்லையா என்று மனிதர்கள் நிந்திப்பார்கள் அல்லவா? இப்படியல்லாமல் மிகவும் கொடியவன் ஒருவன் கஷ்டப்பட்டால் அவனுடைய துயரத்தில் யார் அனுதாபப்படக்கூடும்? நம்மைப்போன்ற அவன் எப்படியாவான், அதனால் நமக்கு எப்படி உண்மையையும் நம்மையும் அறிய முடியும்? எனவே, மனிதனிடம் இருக்கும் பிழையே மனிதனைக் கவர்ந்து விடுகிறது. இதுவும் விதிவசம் அல்லவா? மனிதன் உயர்ந்த பதவிக்குப் போவதும் அங்கிருந்து கீழே விழுவதும் இரண்டும் விதிவசங்களே என்று கிரேக்க நாடகம் தெரிவிக்கிறது.

இப்போது இந்திய நாடகங்களைச் சற்றுக் கவனிப்போம். அரிச்சந்திர சரிதம் அல்லது சாகுந்தலம் என்பவற்றைப் பார்ப்போம். இங்கேயும் கிரேக்கநாடகங்களைப் போல் மனிதன் உயர்ந்த பதவியிலிருந்து விழுவதைப் பார்க்கிறோம், இதுவும் விதிவசமே என்று தோன்றுகிறது. ஆனால் இந்திய நாடகங்கள் கிரேக்க நாடகங்களைப் போல் துயரத்தோடு முடிவதில்லை. மின்னலில் பட்டுப் போன மரம் புதிய இலைகள் விட்டுத் துளிர்ப்பது போல், விதியினால் அடிபட்ட மனிதன் தன் கஷ்டத்திலிருந்து மறுபடியும் எழுந்திருக்கிறான். மனிதன் ஏன் கஷ்டப்படுகிறான்? தப்பு செய்ததனால் கஷ்டப்படுகிறான். கஷ்டப்படுவதனால் நல்லறிவு பெறுகிறான். அறிவு பெற்றதனால் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்கிறான்.

சந்தோஷம் பகலைப் போலவும் துயரம் இரவைப்போல வும் இருக்கின்றன. இவ்விரண்டிலுமிருந்து, வாழ்க்கை யின் இரு புறமும் தெரியவருகிறது. சந்தோஷம் அதிக புத்தியைக் கொடுக்கிறதா, துயரம் அதிக புத்தியைக் கொடுக்கிறதா என்று ஒருவன் கேட்பானானால், 'சூரியன் முக்கியமா சந்திரன் முக்கியமா?' என்று கேட்பது போலாகும். இதற்கு ஒருவன் 'சூரியனைவிடச் சந்திரனே முக்கியம். ஏனென்றால் சூரியன் பகலில் வெளிச்சம் கொடுக்கிறது. ஆனால் சந்திரன் இரவில், வெளிச்சமில் லாத சமயத்தில் வெளிச்சம் கொடுக்கிறது' என்று சொல் லுவதுபோல் ஆகும். துயரமும் சந்தோஷமும் ஒன்றில்லா விட்டால் மற்றொன்று இல்லை. இதனால்தான் இந்திய நாடகங்கள் இரண்டையும் கொடுத்துக் கடைசியில், துயரமில்லாத சாந்தியைத் தருகின்றன.

கிரேக்க நாடகங்கள் தருவது துயரம் கலக்காத சாந்தி என்று சொல்லுவது அரிது. கிரேக்க நாடகங்களில், மனிதர் மிகவும் சந்தோஷமாய் இருப்பதைத் தேவர் விரும்புவதில்லை என்று சொல்லுவது போல் இருக்கிறது. ஏனென்றால், விதியானது தேவர்களைக் காட்டிலும் பெரி தல்லவா? ஆனால் இந்திய நாடகங்களில் அப்படியில்லை. ஏனென்றால், விதியென்பது நாம் செய்த கருமங்களின் பயன்; அதனால் நம்முடைய விதியை நாமே உண்டாக்கிக் கொள்கிறோம். நம்முடைய குணங்களே நமக்கு விதியாக மாறுகின்றன. இதுவுமல்லாமல் மனிதனுடைய ஆன்மா இறப்பதில்லை என்பது இந்து மதத்து அடிப்படையான கொள்கையாதலால், நாம் முன்செய்த காரியங்கள் நல் வினையாயும் தீவினையாயும் பயனை அளிக்கின்றன. இவ் வாறு நம் விதியை நாமே செய்து கொள்கிறோம்.

ரவீந்திர நாத் தாகூர் இதை ஒரு அரிய கதை மூலமாய் தெரிவிக்கிறார்.

"சிறையிலிருப்பவனே! ஏன் நீ இப்படி உறுதியான சங்கிலியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய்?"

"என்னை நானே கட்டிக் கொண்டு விட்டேன்."

"ஏன் இந்தச்சங்கிலியால் உன்னைக்கட்டிக்கொண்டு விட்டாய்?"

"உலகத்தையே கட்டுவதற்காக இந்தச் சங்கிலியைச் செய்தேன். இப்பொழுது நானே இதில் அகப்பட்டுக் கொண்டு விட்டேன்."

இதுதான் விதியின் பிரதியொலி. இதனால்தான் கவிஞர், "கடவுளே! என் இருதயத்திலிருக்கும் வறுமையைப் போக்கு" என்று மற்றோரிடத்தில் கூறுகிறார்.

கடைசியாக விதி பெரியதா, மதி பெரியதா என்று ஒருவன் கேட்கலாம். இதற்கு, மில்டன் தன்னுடைய "இழந்து போன சுவர்க்கம்" என்ற காவியத்தில் பதில் சொல்லுகிறான். கடவுள் மனிதனை மதியுடனே சிருஷ்டித்திருக்கிறார். மதியிருக்கும் வரை அவன் சரியான வழியில் நடக்கிறான். மதியிழந்தவன் விதிக்கு அடிமையாகிறான். விதியும் மதியும் வேறல்ல. விதியே மதியாயும், மதியே விதியாயும் மாறுகின்றன. தனி மனிதனுக்கானாலும் சரி, தேசங்களுக்கானாலும் சரி, இந்த உண்மையே பொருத்தமானது.

காமன்வெல்த் கூட்டுறவு

உலக வாணிபத்தில் காமன்வெல்த் நாடுகள் முக்கிய இடம் வகிக்கின்றன. சுதந்திர நாடுகளின் மூலப்பொருள்கள் தேவையில் 80 சதம் காமன்வெல்த்தில் கிடைக்கிறது. உலக வாணிபத்தில் 28 சதம் காமன்வெல்த்தில் நடைபெறுகிறது. போர்ப் பிற்காலத்தில் காமன்வெல்த் நாடுகளின் பொருளாதாரக் கூட்டுறவு பெருகியதால் ஏற்பட்ட சாதனை இது. லண்டனிலுள்ள காமன்வெல்த் பொருளாதாரக் குழு, காமன்வெல்த் நாடுகளுக்குத் தொடர்பாக நின்று பணியாற்றுகிறது.

உலக நாடுகளின் பொருளாதாரத் தோற்றமே மாறி வரும் இந்நாளில் காமன்வெல்த் கூட்டுறவு பெருகிவருகிறது. பின்தங்கிய நாடுகள் செல்வ வளம் காணத் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றன உலக வாணிபத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டுள. ஐரோப்பிய நாடுகளில், ஆறு நாடுகள் கூட்டாகச்சேர்ந்து பொது வாணிபத்துறை அமைத்துக் கொண்டிருக்கின்றன. அண்மையில் (ஆஸ்திரியா, டென்மார்க், ஸ்வீடன் ,நார்வே, போர்த்துக்கல், ஸ்விட்ஸர்லாந்து, பிரிட்டன் ஆகிய) ஏழு நாடுகள் சேர்ந்து சுதந்திர வாணிபச் சங்கம் அமைத்துக் கொண்டிருக்கின்றன. காமன்வெல்த் நாடுகள் பொதுவான வாணிப அபிவிருத்திக் கொள்கைகளை வகுத்துக் கொள்ள தங்களுடைய செல்வம்-வாணிப நிலை, அபிவிருத்தி வாய்ப்பு முதலியவை பற்றி தனித்தனியாகவும் கூட்டாகவும் மதிப்பீடு செய்துகொள்வது, இப்போது மிகவும் அவசியமாகிவிட்டது.

சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு காமன்வெல்த் பொருளாதாரக் குழு நிறுவப்பெற்றது. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1933 ஆம் ஆண்டில் காமன்வெல்த் நாடுகள், இதை அதிகாரபூர்வமான கூட்டுறவுக் குழுவாக ஏற்றுக்கொண்டன. இந்தக் குழுவுக்கு பிரதிநிதிகளை நியமித்ததுடன் குழுவின் நிர்வாகச் செலவுக்கும் சந்தாச் செலுத்த இசைந்தன. இந்தக் குழுவில் காமன்வெல்த் நாடுகள் ஒவ்வொன்றின் இரண்டு பிரதிநிதிகளும் காலனிகள் பிரதிநிதிகளாக இருவரும் இடம் பெற்றிருக்கிறார்கள். பொதுவாக லண்டனிலுள்ள ஹைகமிஷனர்களும் டிரேட் கமிஷனர்களும் (அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளும்) தம்தம் நாட்டின் பிரதிநிதியாக இந்தக் குழுவில் பணியாற்றுகிறார்கள்.

காமன்வெல்த்-காலனி நாடுகளின் உற்பத்தி-வாணிப புள்ளி விவரங்களைத் தொகுப்பதும் அவ்வப்போது எழக்கூடிய பொருளாதாரச்சிக்கல்களை ஆய்ந்து அறிக்கைகளைத் தயாரிப்பதுமே இந்தக் குழுவின் முக்கியப் பணி. 1938 ஆம் ஆண்டில் காமன்வெல்த் நாடுகளில் உற்பத்தியான மூலப்பொருள்களின் மதிப்பு சுமார் 460 கோடி ரூபாய் என்றும் 1957 ஆம் ஆண்டில் 3200 கோடி ரூபாய் என்றும் அண்மையில் வெளியானதோர் அறிக்கை கூறுகிறது.

சென்ற 35 ஆண்டுகளில் காமன்வெல்த் பொருளாதாரக் குழு, சிறப்பு அறிக்கைகளையும் பொது அறிக்கைகளையும், பழங்கள், பால் பண்ணைப் பொருள்கள், மீன் இறைச்சி, புகையிலை, தேயிலை எனத் தனிப் பொருள்களின் உற்பத்தி-வாணிப அறிக்கைகளையும் தயாரித்திருக்கிறது.

காமன்வெல்த் பொருளாதாரக் குழுவின் தகவல் தொகுப்புப்பணிதான் காமன்வெல்த் அரசாங்கங்களுக்கு முக்கியமானது. கம்பள ரோமம், பால் பண்ணைப் பொருள்கள், இறைச்சி, புகையிலை, தானியங்கள் முதலியவற்றின் உற்பத்தி-ஏற்றுமதி பற்றி, மாத அறிக்கைகளையும் மும்மாத அறிக்கைகளையும் சில சமயங்களில் வாராந்திர அனுபந்தங்களையும், இந்தக் குழு வெளியிடுகிறது. உலக நாடுகளில் விளையும் பொருள்களின் உற்பத்தி—ஏற்றுமதி பற்றிய தகவல்களைப்—பழங்கள், தானியங்கள், தேயிலை போன்ற தோட்டப் பயிர்கள், பால் பண்ணைப் பொருள்கள், இறைச்சி, நார்கள், எண்ணெய் வித்துக்கள் என ஏழு பிரிவுகளில்—தொகுத்து ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.

காமன்வெல்த் பொருளாதாரத் துறையின் செய்திக் களஞ்சியமாக இந்தக் குழு விளங்குகிறது என்றால் மிகையல்ல. இந்தக் குழு சர்வதேச நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பணியாற்றுவதுடன், அவ்வப்போது தகவல்களைச் சேகரித்து வைத்துக் கொள்கிறது.

ஒவ்வொரு நாடும் தேசிய, பொருளாதார முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்டு பணியாற்றுவதால், சிலசமயங்களில் வேற்றுமை தோன்றுவதுமுண்டு. காமன்வெல்த் நாடுகள் பல ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டுச் செயலாற்றத் தொடங்கி விட்டன. உலகப் போக்குக்கு ஏற்றபடி தனது திட்டங்களையும் செயல்களையும் விரிவுபடுத்திக் கொள்ளும் அவசியம் காமன்வெல்த் பொருளாதாரக் குழுவுக்கு உண்டு. 1958 ஆம் ஆண்டில் கானடாவில் நடந்த காமன்வெல்த் வாணிபப் பொருளாதார மகா

நாட்டில் பொருளாதாரக் கூட்டுறவு—முன்னேற்ற முயற்சியை விரிவுபடுத்தத் திட்டமிட்டார்கள். காமன்வெல்த் நாடுகள் ஒன்றுடன் ஒன்று நடத்தும் வாணிபத்தைக் கவனித்தால்தான் காமன்வெல்த்தில் நடைபெறும் வாணிபத்தின் முக்கியம் விளங்கும். ஒரு நாட்டின் வாணிபத்தில் காமன்வெல்த்தில் நடைபெறும் வாணிபத்தின் பத்தின் விகிதம் வருமாறு: பிரிட்டன் 43 சதவிகிதம்; இந்தியா 41 சதவிகிதம்; ஆஸ்திரேலியா 55 சதவிகிதம்; நியூஸிலாந்து 74 சதவிகிதம்; ரொடீஷியா 72 சதவிகிதம்; இலங்கை 53 சதவிகிதம்.

புள்ளித் தொகுப்புப் பிரிவை விரிவுபடுத்தத் திட்டமிடப் பெற்றிருக்கிறது. சந்தை—விலைவாசி நிலவரம் பற்றித் தொடர்ந்து வெளியிடவும், காமன்வெல்த் நாடுகளில் கிடைக்கும் எல்லா மூலப் பொருள்களைப் பற்றி தகவல்களைத் தொகுத்து வெளியிடவும் உத்தேசித்துள்ளனர் காமன்வெல்த் நாடுகளின் முன்னேற்றம் நிதிவசதி முதலிய தகவல்களை வெளியிடும் முயற்சியும் உண்டு

காமன்வெல்த் பொருளாதாரக் குழு, காமன்வெல்த்தைச் சேர்ந்த எல்லா நாடுகளுக்கும் பணியாற்றுகிறது. அதன் பராமரிப்புச் செலவை எல்லா நாடுகளும் பகிர்ந்து கொள்கின்றன. காமன்வெல்த் கூட்டுறவில் தலையாயது காமன்வெல்த் பொருளாதாரக் குழுவின் பணியாகும்.

வளரும் விஞ்ஞானம்

உலகிலேயே மிகப் பெரிய அணு மின் விசை நிலையம் அமெரிக்காவில் சிக்காகோ நகருக்கருகில் வீடுகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் வழங்கி வருகிறது.

அந்த மின்விசை நிலையம் தற்பொழுது 64 ஆயிரம் கிலோவாட் மின்விசை உற்பத்தி செய்கிறது. இவ்வாண்டுக் கடைசிக்குள் ஒரு லட்சத்து எண்பதாயிரம் கிலோவாட் விசை உற்பத்தி செய்யும். அப்பொழுது அப்பகுதியில் உள்ள இரண்டு லட்சம் மக்களுக்குப் போதுமான அளவில் மின் விசை வழங்கும்.

முப்பது கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப் பெற்றுள்ள அந்த நிலையம், அமெரிக்காவிலுள்ள அணு மின் விசை நிலையங்களின் அனைத்திலும் மிகப் பெரியது.

அணு உலை உற்பத்தி செய்யும் வெப்பத்திலிருந்து தோற்றுவிக்கப் பெறும் நீராவி, டர்பைன் யந்திரத்தை இயக்குகிறது; மின் விசை யந்திரத்தை டர்பைன் இயக்குகிறது; மின் விசை பிறக்கிறது.

அழுத்தம் ஏற்றப்பெற்ற தண்ணீரை, அணு உலை முறையில் பயன் படுத்துகின்றனர். இது அமெரிக்காவில் லேயே மிக முற்போக்கான முறை. எனினும், இவ்வாறு மின் விசை உற்பத்தி செய்வதற்குச் செலவு அதிகமாகிறது. சாதாரண நீராவி, நீர் விசை மின்சார உற்பத்தி முறைகளில் செலவு குறைவு.

மிகச்சிறிய பல்பு

குண்டூசித் தலையளவே உள்ள மின்சார பல்புகள் அமெரிக்காவில் உற்பத்தியாகின்றன.

மிக வேகமாகக் கணக்கிடும் கணக்குக் கருவிகளிலும் விண் வெளி வாகனங்களிலும் இந்தப் பல்புகளை பயன் படுத்துகிறார்கள்.

இந்தப்பல்பு ஒரு வோல்ட் மின்-அழுத்தத்தில் எரிவது. அதனுள்ளிருக்கும் கம்பி மனிதன் தலைமயிரின் கனத்தில் பத்தில் ஒரு பங்கு குறுக்களவு உள்ளது. இது தரும் ஒளி வீட்டிலுள்ள 25 வாட் பல்பின் ஒளியில் ஆயிரத்தில் ஒரு பங்காகும்.

இந்தப் பல்பு. வைத்தியத் துறையிலும் பயன் படுகிறது.

ஸ்டெயின்லெஸ் ஸ்டீலுக்கு எதிரி

கரிக் கலவை அதிகமுள்ள எஃகின் மீது லேசாக அலுமினியம் பூசினால், அது ஸ்டெயின்லெஸ் ஸ்டீலைப் போல் பயன்படும்; ஆனால் செலவு குறைவு அதிக வெப்பத்தினால் இரும்பு இற்றுப் போகாமலிருக்க இவ் வகை அலுமினியப் பூச்சு மிகவும் உதவும் என்று அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கூறுகிறார்.

செயற்கை கோள் வழியாகப் போன்

உலகத்தில் எந்த இடத்திலிருந்தும் இன்னோரிடத் துக்கு மிகக் குறைந்த செலவில் "போன்" பேசுவதற்குச் செயற்கை கோள்கள் வழி செய்யலாம். அவ்வாறு பேசு வதற்குச் சுமார் ஒரு ரூபாய் தான் செலவாகும் என்று சர்வதேச விஞ்ஞான ரேடியோ யூனியன் தலைவர் டாக்டர் லாய்ட் வி. பெர்க்னர் கூறுகிறார்.

காற்றடைத்த பெட்டி

விலை மதிப்புள்ள யந்திரங்கள், வேலைப்பாடு மிக்க கலைப்பொருள்கள், எளிதில் உடைந்துவிடக்கூடிய கருவிகள், விலையுயர்ந்த கண்ணாடிச் சாமான்கள் ஆகியவற்றையெல்லாம் இப்போது முற்றிலும் பத்திரமான முறையில் கட்டுக்கட்டி அனுப்பமுடியும்; இதைப் பற்றிக் கவலையே படவேண்டியதில்லை. இவற்றைப் பொட்டலம் கட்டுவதற்கு உபயோகிக்கப் பெறுவது உண்மையில் வெறும் காற்றுத்தான்.

மேற்கு ஜெர்மனியில், பிளாஸ்டிக் பெட்டிகளுக்குள் இந்தச் சாமான்களை வைத்து, அந்தப் பெட்டிகளின் இடை வெளியில் நன்கு காற்றடைத்துச் 'சீல்' போட்டு விடுகிறார்கள். குறிப்பாக, கடல் கடந்து அனுப்பவேண்டிய பண்டங்கள் விஷயத்தில் இம்மாதிரி காற்றடைத்துப் பார்சல் செய்யும் முறையைக் கையாளுகிறார்கள். பெட்டிகளுக்குள் இருக்கும் சாமான்களை அப்படியே வெளியிருந்தவாறே பார்க்க முடியுமாதலால், எல்லைகளில் சுங்கப் பரிசோதனைக்குக் கூடப் பெட்டியைப் பிரிக்க வேண்டிய அவசியமில்லை.

மொழி போதனைக்கு யந்திரம்

அயல் நாட்டு மொழிகள் போதனை செய்யும் ஆசிரியர்களுக்கு உதவியாக, ருஷ்யாவில் உள்ள ஒரு கல்விக் கழகம் ஒரு யந்திரத்தைத் தயாரித்திருக்கிறது.

மாணவர்கள் கேட்கும் பாடங்களை இந்த யந்திரம் திரும்பத் திரும்பச் சொல்லிக் காட்டுகிறது. மாணவர்கள் பாடத்தைப் புரிந்து கொண்டுவிட்டார்களா என்பதைச் சோதிப்பதற்காகக் கேட்கப் பெறும் கேள்விகளுக்கு நம்-

விருப்பத்திற்கேற்ப வாய் மூலமாகவோ அல்லது எழுத்து வடிவத்திலோ பதில் அளிக்கிறது.

மாணவர்கள் கூறும் பதில்களை இந்த யந்திரத்தைக் கொண்டு சரிபார்த்து விடலாம். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இது மிக உதவியாக அமையும்.

பிளாஸ்டிக் போர்வை

மேற்கு ஜெர்மனியில் மக்களின் நன்மைக்காகப் பிளாஸ்டிக் பலவிதங்களில் உபயோகிக்கப் பெறுகிறது. முந்திரிக் கொடிகளின்மேல் பிளாஸ்டிக் துணியைப் போர்த்துவிட்டால், பனியோ, ஆலங்கட்டியோ முந்திரிப் பழங்களைக் கெடுக்காதவாறு பாதுகாக்க முடிகிறது. முந்திரிகொடியிலே நன்கு முற்றிப் பழுப்பதற்கு இது உதவி செய்கிறது. அது மட்டுமல்ல; மகசூல் பெருகுவதற்கும் இதனால் வழி ஏற்படுகிறது. நன்கு பழுத்தால், முந்திரப்பழத்தின் தரமும் உயர்கிறது.

அதிசயக் கான்கிரீட்

மிக நுண்ணிய துகள்களாலான கான்கிரீட் வகை தயாரிக்கப் பெற்றிருக்கிறது. அது அமைப்பில் உருக்கைப் போன்றது.

உருக்கைப் போலவே அதை 'ரோலிங் மில்லில்' உருட்டிப் பலவகைப் பொருள்களையும் தயாரிக்கிறார்கள்.

உலோகத்தைப் போலவே, அந்தக் கான்கிரீட்டை வளைத்து, நெளித்து வேலை செய்ய முடிகிறது. அதற்கு, வார்த்த இரும்பை ஒத்த வலிவு இருக்கிறது. ரசாயன முறையைக் கையாண்டு, கான்கிரீட் துண்டுகளை இணைத்துச் சேர்த்துவிடலாம்.

கொய்த மலர்கள்

பிரார்த்தனை

தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்கு
தம்மையே ஏக்க அருள் செய்வர் ஆதலால்
தம்மையே நாளும் வணங்கித் தொழுது இறைஞ்சி
தம்மையே பற்று மனத்து என்னும் வைத்தோமே

—பெரிய திருமொழி

அசத்தினின்று என்னைச் சத்துக்கு அழைத்துச் செல்.

இருளினின்றும் என்னை ஒளிக்கு அழைத்துச் செல்.
சாவினின்று என்னைச்சாவாமைக்கு அழைத்துச்செல்

—பிருகதாரணியக உபநிஷத்

பிரபஞ்சம் முழுவதும் பரந்து நிற்கும் இறைவனிடம் வேண்டிக் கொள்க. அவன் தன்னுடைய கருணையை உன் மீது நிச்சயம் பொழிவான்.

—சாரதாமணி தேவி

வெறுப்புக்குப் பதில்

உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு.

உன் அங்கியை எடுத்துக் கொள்கிறவனுக்கு உன் ஆடையையும் கொடு.

உன்னுடையதை எடுத்துக் கொள்ளும் எவனையும் அதைத் திரும்பக் கொடுக்கும்படி கேளாதே.

—ஏகநாதர்.

சாணக்கிய நீதி

மறைவில் நம் காரியத்தைக் கெடுத்து, நம் எதிரில் பிரியமான வார்த்தைகளைச் சொல்லுகிற சிநேகிதனை நீக்க வேண்டும். அவன், மேலே பாலும் அடியில் விஷமும் கொண்ட குடத்தைப் போன்றவன்.

அற்பர்கள், இவன் எனக்கு மிகவும் வேண்டியவன், இவன் விரோதி என்று எண்ணுவார்கள்; ஆனால் பெருந் தன்மை உள்ளவர்களுக்கு உலகெல்லாம் நட்பினரே.

விசுவாசமில்லாதவனை நீ விசுவாசிக்காதே; விசுவாசம் உள்ளவனையும் மிதமிஞ்சி விசுவாசிக்காதே. ஏனென்றால், ஒரு காலத்தில் அவனுக்குக் கோபம் வரும்பொழுது, உன்னுடைய குறைகள் எல்லாவற்றையும் வெளிப்படுத்து வான்.

சேவகர்களை ஒரு வேலையாய் அனுப்பும்போதும், சுற்றத்தாரை விசனம் வந்த காலத்தும், நண்பனை ஆபத்து வந்தவிடத்தும், மனையாளைச் சீர்குலைந்த போதும் அறியலாம்.

சான்றோர் இடத்தில் நல்ல குணங்கள் பல உண்டு; மூடர்களிடத்தில் கேவலம் தோஷங்களே. ஆதலால், ஆயிரம் மூடர்களில் அறிஞனை ஒருவன் இருந்தபோதும் சிறப்படைகிறான்.

பிறர் மனைவியைத் தாயார் போலவும், பிறர் பொருளை மண்ணாகவும், மன்னுயிர்களைத் தன்னுயிர் போலவும், எவன் பார்க்கிறானோ, அவனே அறிஞன்.

பிள்ளையைப் படிப்பிக்காத தாய் சத்துரு, பிதா வைரி. அன்னங்கள் நடுவே கொக்கு இருந்தால் எப்படியோ, அப்படியே சபை நடுவில் இந்தப் பிள்ளையும்.

கெட்ட விருட்சம் ஒன்று இருந்தபோதிலும், அதன் பொந்திலிருக்கிற நெருப்பினால் அந்த வனமெல்லாம் எரிந்து போம். கெட்ட பிள்ளையினாலும், குலமும் அப்படித்தான்.

வாழ்விலும், துக்கத்திலும், பஞ்சத்திலும், பகை மூண்ட காலத்திலும், அரண்மனை வாசலிலும், சுடுகாட்டிலும் எவன் நம்மைக் கைவிடாமல் நிற்கிறானோ, அவனே நம் உறவினன்.

மேலான தருமம்

பிறருக்குந் துன்பம் செய்யாதிருத்தலே மேலான தருமம்.

—விவேகபானு

இன்றியமையாதவை

மனித வாழ்வுக்கு உணவு மட்டும் போதாது; அறிவும் இன்றியமையாததாம்.

—பைபிள்

மனிதனும் நோன்பும்

மனிதனுக்காக நோன்புகளே தவிர, நோன்புகளுக்காக மனிதன் சிருஷ்டிக்கப் பெறவில்லை.

—பைபிள்

சுக துக்கங்களுக்கு மூலம்

மனித வாழ்க்கையில் உன் சுக துக்கங்களுக்கு மூலம், மனிதனுடைய எண்ணம், செயல், ஆசைகளே; விதியை ஆக்குவதும் நீக்குவதும் மனிதனே.

—கன்பூஷியஸ்

உண்மை முஸ்லிம்

மனமொழி மெய்களால் எவருக்கும் தீங்கு செய்யாத குற்றமில் குணத்தோனே, உண்மையான முஸ்லிம்.

— குர் ஆன்

வைராக்கியம்

முள்ளும் புதரும் நிரம்பிய காட்டில் வெறுங்காலோடு நடப்பது முடியாத காரியம். ஆனல் காடு முழுவதையும் தோலால் மூடினலாவது, தன் காலுக்குச் செருப்புப் போட்டுக் கொண்டாலாவது ஒருவன் நடக்கலாம். காடு முழுவதும் தோலால் மூடுவது முடியாத காரியம். ஆதலால், தன் காலுக்குச் செருப்புப் போட்டுக் கொள்வதே நியாயமானது.

அதுபோல இந்த உலகத்தில் மனிதனுக்கு அளவற்ற தேவைகளும், ஆசைகளும் உண்டாகித் துன்பத்தைக் கொடுக்கின்றன. அவைகளினின்றும் தப்பித்துக் கொள்ள இரண்டே மார்க்கங்கள்தாம் உள்ளன. தேவைகளைப் பெற்றுத் திருப்தி அடைதல் அல்லது தேவைகளை வேண்டாதிருத்தல்.

மனிதனுக்கு உண்டாகும் இச்சைகளை எல்லாம் திருப்திப் படுத்துவது முடியாத காரியம். ஆதலால் கிடைத்தவற்றைக் கொண்டு திருப்தியடைதல், உண்மை ஞானத்தைப் பெறுதல் ஆகிய இரண்டிலும் மனிதன்

தன் இச்சைகளையும் தேவைகளையும் குறைக்க வேண்டியதுதான் நியாயமான காரியம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

சரீரம்

இந்திரா! இந்தச் சரீரம் சாகக்கூடியது; சாவினால் பிடிக்கப்படுவது. மரணத்தையே அறியாததும் உடம்பற்றதுமான ஆன்மாவுக்கு இது இருப்பிடம்.

உடம்புடன் கூடிய இவன், விருப்பு வெறுப்பால் பிடிக்கப்படுகிறான். உடம்புடன் கூடிய இவனுக்கு விருப்பு வெறுப்பினின்று விடுதலை இல்லவே இல்லை. ஆனால் சரீரம் இல்லாதவனை விருப்பு வெறுப்புக்கள் தொட மாட்டா.

காற்றுக்குச் சரீரம் இல்லை; மேகமும், மின்னலும், இடியும் சரீரம் இல்லாதவை; எங்ஙனம் இவை ஆகாயத்துக்கு மேலே கிளம்பி, உயர்ந்த ஒளியை அடைந்து தமது சுயஉருவத்துடன் விளங்குகின்றனவோ அப்படியே தெளிவடைந்த இவன் இந்த உடம்பிலிருந்து கிளம்பிப் பரஞ்சோதியை அடைந்து சுய உருவத்துடன் விளங்குகிறான்.

இவன் உத்தம புருஷன். இவன் அங்கே வாகன வசதிகளுடன் கூடிச் சிரித்தும், விளையாடியும், மகிழ்ந்தும் உடன்பிறந்த சரீரத்தை நினையாமல் உலவுகிறான். வண்டியில் குதிரை பூட்டப் பெற்றிருப்பது போல், இந்த உடம்பில் பிராணன் பூட்டப் பெற்றிருக்கிறது.

—சாந்தோக்கிய உபநிஷத்

ஆண்டவன் கையில்

எவனுக்கு உலகில் எவரிடமும் விரோதம் இல்லையோ, எவன் நடுநிலையில் நிற்பவனுய்ப் பற்றற்றுப் பணி புரிகிருனே, எவன் தான் செய்வதனைத்தையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்து விடுகிருனே, எவன் பக்தியில் மூழ்கியிருக்கிருனே, சகிப்புத்தன்மையும், ஆசையின்மை வைராக்கியமும், அன்பும் உள்ள பக்தன் எவனுக இருக்கிருனே, அவனே ஆண்டவனுடைய கையில் ஆயுதமாக அமைகிருன்.

—விநோபா பாவே

தானம்

ஆண்டவன் பூமியை உண்டாக்கியபோது அது அசைந்து அதிர்ந்தது. அதன்மேல் இறைவன் நிலையான மலைகளைப் பொருத்தினன். உடனே அது அமைதியுடன் நின்றது. மலைகளின் பலத்தைக் கண்டு பிரமித்த சிலர். "இறைவனே! மலைகளைவிடப் பலம்பெற்றவற்றை நீ அமைத்திருக்கிருயா?" என்று கேட்டார்கள்.

அதற்கு ஆண்டவன், "ஆமாம், கடின இரும்பைப் படைத்திருக்கிறேன். அது மலைகளை உடைக்கிறது" என்றுன்.

"இரும்பை விடப் பலம் மிக்கதொன்றை நீ படைத்ததுண்டா?" என அவர்கள் மீண்டும் கேட்டார்கள்.

"உண்டு; தகிக்கும் நெருப்பைப் படைத்திருக்கிறேன். இது இரும்பை உருக்குகிறது" பதில் வந்தது.

"நெருப்பைவிடச் சக்தி பெற்றதைப் படைத்திருக்கிருயா?" என அவர்கள் மேலும் கேட்டார்கள்.

"ஆமாம். தண்ணீரைப் படைத்திருக்கிறேன். அது நெருப்பை அணைத்து விடுகிறது" என்றான் ஆண்டவன்.

"நீரைவிட ஆற்றல் மிக்க ஏதாவது உண்டா?" என அவர்கள் கேட்டனர்.

"எங்கும் நிறைந்த காற்று அதைக் கொந்தளிக்கச் செய்கிறது" என்றான் ஆண்டவன்.

"காற்றைவிடப் பலம் வாய்ந்ததைப் படைத்த துண்டோ?" என அவர்கள் மீண்டும் கேட்டார்கள்..

"இடது கைக்குத் தெரியாமல் வலது கையால் எவன் தானமளிக்கிறானோ, அந்த மனிதன்தான் எல்லாவற்றையும் விடப் பலசாலி" என்று ஆண்டவன் பதிலளித்து மறைந்து விட்டான்.

—நபிகள் நாயகம்

முக்தி ஆசை

"தங்களுடைய காரியங்களை எல்லாம் ஊன்றிக் கவனிக்கும்பொழுது, அவ்வளவுக்கும் ஆதாரமான வேர் போல் இருப்பது முக்தி ஆசையே என்று எனக்குத் தோன்றுகிறது" என்று ஒரு மேல்நாட்டு நிருபர் காந்தியடிகளிடம் கூறினார்.

காந்தியடிகள் புன்னகையுடன் பின்வருமாறு பதிலளித்தார்:

முக்தி ஆசை என் காரியங்கள் ஒவ்வொன்றிலும் இருக்கத்தான் இருக்கிறது. ஆனால், அதில் மற்றவர்களுக்குச் சம்பந்தம் இல்லை. முக்தி ஆசை தனி மனிதனின் சொந்த விஷயம். உலகத்துக்கு வேரைப் பற்றிக்

கவலையில்லை; பழத்தைப் பற்றியே அக்கறை. ஆனால் மரத்துக்கோ வேரைப் பற்றியே முக்கியமாகக் கவலை; பழத்தைப் பற்றி அக்கறை இல்லை.

தனி மனிதன் தன் அந்தராத்மாவிலேதான் ஒரு முனைப்படவேண்டும்; தன் உழைப்பையும் துன்பங்களையும் கொண்டு அதை ஊட்டி வளர்க்க வேண்டும்; அதுவே அவனுடைய முக்கியக் கவலையாக இருக்க வேண்டும். ஆனால், சமூகத்துக்கோ பழத்தைப்பற்றி மட்டிலுமே கவலை.

ஒரு மனிதன் செய்யும் செயலின் விளைவுகளைப் பற்றியன்றி, அவனைப் பற்றித் தீர்ப்புக்கூற வேறு என்ன ஆதாரம் உண்டு? பழங்களைக் கொண்டுதானே மரத்தின் தன்மையை நிர்ணயிக்கிறோம்?

வண்டியைச் செப்பனிட

தொழிலாளிகளின் வேலைச் சிரமத்தை நீக்குவதில் மனிதன் தன் அறிவை உபயோகிப்பதில்லை. சோம்பேறியின் சோம்பலைச் சுகமாக்குவதிலும், அதை அதிகப் படுத்துவதிலுமே மனம் போகிறது.

அறிவில்லாத மக்கள் வண்டியைத் தலைகீழாகப் போட்டு இழுக்கிறார்கள். உணவின் பொருட்டு உழைத்து உழைப்பதன் அவசியத்தை வாழ்க்கையில் உணர்ந்தால் வண்டியை நேராக இழுத்தது போலாகும்; வண்டி உடைந்து விடாமல் சுலபமாகச் செல்லும். இந்த உழைப்பில் வெறுப்பிருக்கும் வரை, நமது பொய் வாழ்க்கையை எவ்வளவு திருத்த முயன்றாலும் பயனில்லை.

வண்டி தலைகீழாக இருக்க, வண்டிச் சக்கரம் மேலே இருக்க, நாம் எவ்வளவு தூரம் பழுதுபார்த்தாலும், பயன்

படாது. முதலில் வண்டியை அல்லவா திருப்பி நேராக நிற்கச் செய்ய வேண்டும்.

—டால்ஸ்டாய்

விதையும் செயலும்

விதைப்பதற்கும் வீசி எறிவதற்கும் வித்தியாசம் உண்டு. விதைத்த விதை எவ்வளவு சிறியதாயினும் எண்ணமுடியாத அளவு பெருகிப் பயன் அளிக்கும். எறியப் பெற்றதோ, பயனில்லாமல் வீணாகிவிடும்.

ஆண்டவனிடம் அர்ப்பணம் செய்யப்பெற்ற கர்மம் வயலில் விதைத்த விதை போன்றது; அதனால் வாழ்க்கையில் அளவு கடந்த ஆனந்தமும் தூய்மையும் ஏற்படும்.

—விநோபா பாவே

கல்வி

உங்களுடைய கல்வி முறை தூய்மை, உண்மை என்ற பலமான அடிப்படையின்மீது கட்டப் பெறுதல் வேண்டும். அப்படிக் கட்டப்பெருத கல்வி ஒன்றுக்கும் பயனற்றதாகி விடும்.

பிள்ளைகளே! உங்களைப் பொறுத்த வரையில் நீங்கள் யாவரும் தூய வாழ்க்கை நடத்த வேண்டும். அப்படி நடத்தாவிட்டால், நீங்கள் எவ்வளவுதான் படித்திருந்த போதிலும் சரி, சிறந்த படிப்பாளியாக நீங்கள் விளங்கிய போதிலும் சரி, அதனால் பயனே இல்லை. உங்கள் வாழ்க்கையே கெட்டுப்போய் விட்டதாகவே நான் சொல்லுவேன்.

ஆசிரியர்களின் சொந்த வாழ்க்கையிலிருந்து அதிகமாகக் கிரகித்துக் கொள்கிருர்களே யன்றி, ஆசிரியர்கள்

படித்துக்காட்டும் புத்தகங்களிலிருந்தோ, அல்லது அவர்கள் நிகழ்த்தும் பிரசங்கங்களிலிருந்தோ பிள்ளைகள் அதிகமாகக் கிரகித்துக் கொள்வதில்லை.

வாயினால் ஒன்றைச் சொல்லிக்கொடுத்து மனத்தில் ஒன்றை நினைத்துக்கொண்டிருக்கிற ஆசிரியர் ஒரு நாளும் உருப்படமாட்டார். —காந்தியடிகள்

வாருங்கள் !

குறுகலான பொந்துகளிலிருந்து வெளிவாருங்கள். உங்களைச் சுற்றிலும் நன்கு நோக்குங்கள். தேசங்கள் எப்படி முன்னேறுகின்றன வென்று பாருங்கள். உங்களுக்கு மனிதர்களிடம் அன்புண்டா? உங்கள் நாட்டினிடம் அன்புண்டா? அப்படியானால் வருக; இன்னும் பெரிய, சிறந்த லட்சியங்களுக்காகப் போராடுவோம். பின்னால் திரும்பிப் பார்க்கவேண்டாம். உங்களுக்கு உயிரினும் அருமையானவர்கள் புலம்பி அழும் சத்தம் கேட்கினும் திரும்பிப் பார்க்கவேண்டாம்; முன்னேக்கிச் செல்லுங்கள்.

தீரர்களே! வேலை செய்துகொண்டே போங்கள். விட்டு விடாதீர்கள். முடியாது என்ற பேச்சு வேண்டாம். வேலை செய்யுங்கள்; இறைவன் அவ்வேலைக்குத் துணையாய் இருப்பான். உங்களிடம் மகா சக்தி கோயில் கொண்டிருப்பதை உணருங்கள்.

மனிதர்கள், மனிதர்களே வேண்டும். மற்ற எல்லாம் தாமே வந்து சேரும். பலம், வீரியம், நம்பிக்கை, மாசற்ற உண்மை இவையுடைய இளைஞர்களே தேவை. இத்தகையோர் நூறு பேர் இருந்தால், உலகத்தில் ஒரு பெரும் புரட்சியை உண்டு பண்ணி விடலாம்.

—விவேகாநந்தர்

இரண்டு தடைகள்

இந்தியாவில் நமது முன்னேற்ற மார்க்கத்தில் குறுக்கிடும் இரண்டு பெரிய தடைகள் இருக்கின்றன. ஒன்று பழைய குருட்டு வைதிகம்; மற்றொன்று நவீன ஐரோப்பிய நாகரிகம். இவ்விரண்டினுள், பழைய குருட்டு வைதிகமே மேல் என்பேன்.

பழைய வைதிகன் ஒருவன் அறியாமையில் மூழ்கியவனாயிருக்கலாம்; பயிற்சியற்றவனாயிருக்கலாம். ஆனாலும் அவன் ஆண் மகன்; அவனுக்கு நம்பிக்கையுண்டு; பலமுண்டு; அவன் தன் வலிமை கொண்டுதான் நிற்கிறான். ஐரோப்பிய நாகரிக வயப்பட்ட மனிதனோ, முதுகெலும்பற்றவன். அவன் பற்பல இடங்களிலிருந்தும் பகுத்தறிவின்றிப் பொறுக்கிய கருத்துக்களின் கலப்புப் பிண்டமாவான்; இக் கருத்துக்களை அவன் ஜீரணித்துக் கொள்வதில்லை. முரண்பட்ட அக்கருத்துக்களினால் அவனது உள்ளம் அமைதியின்றி அலைக்கப் பெறுகிறது.

—விவேகாநந்தர்

நாகரிகத்தின் அடிப்படை

மக்களால் நடத்தப்பெறும் புதிய ஆட்சி முறை ஒன்று தோன்றி வருகிறதென்பதற்கு அறிகுறிகள் ஏராளமாய் இருக்கின்றன. அந்த ஆட்சி முறையைச் சமுதாய ஆட்சி என்றாலும், வேறு பெயரிட்டு அழைத்தாலும் கவலையில்லை. தங்கள் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தி செய்யப் பெறவேண்டும் என்று மக்கள் கேட்கப்போவது நிச்சயம். வேலை குறைய வேண்டும் என்றும், கொடுமையும் யுத்தமும் ஒழிய வேண்டும் என்றும், வயிறு நிறைய உணவு வேண்டும் என்றும் மக்கள் வலியுறுத்துவார்கள். ஆகவே, தற்கால நாகரிகமோ, சமயத்தையும் மக்களின் நற்குணத்தையும் அடிப்படையாகக் கொண்டாலன்றி நிலைத்து நிற்காது.

—விவேகாநந்தர்

காந்தி வாக்கு

நான் எவ்வாறு இருக்க விரும்புகிறேனே, அவ்வாறு இருப்பேனுயின், அப்போது யாரோடும் வாது புரிய வேண்டிய தேவை இல்லை. என் சொற்கள் படீமரத்தாணி யாய் உள்ளத்தில் பதியும்; வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்ல வேண்டிய அவசியம் கூட ஏற்படாதே! எண் ணிய, எண்ணியபடி எய்துவதற்கு, என் உள்ளத்தால் உள்ளினுலே போதுமே! ஆனல், எனது வரம்புகளை வேதனையோடு அறிவேன்.

'எல்லாம் நன்மைக்கே' என்ற நல்லுணர்ச்சியில் நான் ஓர் அடக்கமுடியாப் பிரியன்; ஏனெனில் எனக்கு என்னிடம் நம்பிக்கை உண்டு. இது மிகவும் அகம்பாவ மாகத் தொனிக்கிறது அல்லவா? ஆனல், இதனை என் பணிவின் பாதாளத்திலிருந்து கூறுகிறேன். நான் கடவு ளுடைய தலைசிறந்த சக்தியில் நம்பிக்கை உடையவன். சத்தியத்தில் நம்பிக்கை உடையவன். எனவே, இந்த நாட்டின் வருங்காலத்தைப் பற்றியோ, மனித வர்க்கத் தின் வருங்காலத்தைப் பற்றியோ எனக்குச் சந்தேகம் இல்லை.

சிறுமைக்கும், தோல்வி என அழைக்கப்பெறுவதற் கும், ஒரு சூருவளி வாழ்க்கைக்கும் நடுவில், எனது சாந் தியை என்னுல் நிலைநாட்ட முடிகிறது: எதனுல் என்ருல் சத்தியம் என்று சொல்லப்பெறும் ஆண்டவனிடத்தில் எனக்குள்ள நம்பிக்கையினுலேயே யாகும்.

தொல்பொருள் வயது

பழம் பொருள்களின் காலத்தைக் கண்டுபிடிக்கும் முறை ஒன்றை விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். 30 ஆயிரம் ஆண்டு வரையுள்ள பொருள்களின் காலத்தை இதைக்கொண்டு அறியலாம். இம்முறையால் புதிய உண்மைகள் தெரிய வருகின்றன. நெடுங்காலமாக ஒப்புக்கொள்ளப்பெற்றுவந்த சில கொள்கைகள் தவறானவை என்றும் புலப்படுகின்றன. கார்பன்-14 என்பதன் கதிர் வீச்சு அணுக்கள் வெளியிடும் அணுக்கதிர் வீச்சுக்களே பழம் பொருள்களின் காலத்தை அறியப் பயன்படுகின்றன.

1941ஆம் ஆண்டில் விஞ்ஞானிகள் இருவர் கார்பன்-14 என்ற ரசாயனப் பொருளைக் கண்டு பிடித்தார்கள். அதற்கு ஏழு ஆண்டுகளுக்குப்பின், டாக்டர் வில்லார்ட் எப். லிப்பி என்பவரின் மனத்தில் ஒரு கருத்து உருவாயிற்று.

"ஆதிகாலம் முதலே பூமியைச் சூழ்ந்துள்ள வாயு மண்டலத்தை விண் வெளியிலிருந்து காஸ்மிக் கதிர்கள் தாக்கிய வண்ணமாக இருக்கின்றன. பூமிக்குச் சுமார் ஐந்துமைலுக்கு மேலேயுள்ள நைட்ரஜன் அணுக்களைச் சில காஸ்மிக் கதிர்கள் தாக்கி, கார்பன்-14 என்பதன் கதிர்வீச்சு அணுக்களைத் தோற்றுவிக்கின்றன. 'செடி கொடிகளும், விலங்குகளும் உயிர்வாழ்கின்ற காலத்தில் கரியமிலவாயு (கார்பன் டை ஆக்ஸைட்) உருத்தில் கார்பன்-14 என்பதைக் கிரகிக்கின்றன; மனிதர்களும் கிரகிக்

கிறார்கள். ஆனால், உயிர்நீங்கியதும் அவ்வாறு கிரகிப்பது நின்றுவிடுகின்றது; கார்பன்-14 தன் சக்தியை இழக்கத் தொடங்குகிறது. ஒரு பொருள் உயிரிழந்து சுமார் 6000 ஆண்டுகள் ஆகிவிட்டால், அதன் கார்பன்-14 தன் அரைப் பங்கை இழக்கிறது. ஒரு பொருளில் மீந்திருக்கும் கார்பன்14எவ்வளவுஎன்பதை அளந்தறியமுடியும். அதை அளந்தறியக்கூடிய உணர்ச்சியுள்ள கருவி ஒன்றை அமைத்துவிட்டால், எவ்வளவு கார்பன்-14 அப்பொருள் இழந்துள்ளது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்;அதன் மூலம் அந்தப் பொருளின் வயதைக் கணக்கிடலாம்" என்று டாக்டர் லிப்பி கருதினார்.

அவர் தம் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி ஒரு கருவியைத் தயாரித்தார். அதனைக் கொண்டு எகிப்திய மரத்துண்டு ஒன்றைச் சோதனை செய்து பார்த்தார். அந்த மரத்துண்டு எகிப்திய மன்னர் மூன்றாவது செஸாஸ்டிரிஸ் என்பவரின் கல்லறையில் கண்டு பிடிக்கப் பெற்ற மரணப் படகில் உள்ளது. மூன்றாவது செஸாஸ்டிரிஸ் கி. மு. 3700 ஆம் ஆண்டில் இறந்தார் என்று கருதுகின்றனர். அந்த மரத்துண்டின் கதிர் வீச்சுள்ள கார்பன்-14 ஐச் சோதனை செய்துபார்த்தார்.அதன் கதிர் வீச்சுக்கள் கணக்கிடப்பெற்றன, செஸாஸ்டிரிஸ் மன்னர் ஏறக்குறைய கி. மு. 3700 ஆம் ஆண்டில் இறந் திருத்தல் வேண்டுமென்று கண்டுபிடித்தார்.

உலக முழுவதிலுமிருந்து தொல்பொருள்கள் வந்து சேரத்தொடங்கின. அவை சோதனை செய்யப்பெற்றன. எகிப்திலிருந்து கோதுமை மணிகளும் பார்லி விதைக ளும் வந்தன. அவை 5200 ஆண்டுக்கு முற்பட்டவை என்று கண்டுபிடித்தார். இராக்கிலிருந்து வந்த நிலக்கரி துண்டின் வயது 6600 ஆண்டு என்று கணககிட்டார்.

சிக்காகோவில் மணல் கட்டிக்குக் கீழே கண்டுபிடிக்கப் பெற்ற மரத்தின் காலம் 8200 ஆண்டு என்று நிலை நாட்டினர். கலிபோர்னியாவிலிருந்து வந்த மக்கிப்போன உயிர்ப் பொருள் 1700 ஆண்டுக்கு முற்பட்டதென்று கண்டார். மற்ரெரு பொருளின் வயது 20,000 ஆண்டுகள் என்று கணக்கிட்டார்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்,மனித வரலாற்றுக் கலைஞர், நில உள்ளியல் அறிஞர், தரை நூல் வல்லார் ஆகியோரிடையே இப் புதுமுறை ஒரு பரபரப்பை உண்டாக்கியது. அதற்கு முன் திட்டமானவை என்று கருதப் பெற்ற கால அட்டவணைகள் மாறுதல் அடைந்தன.

நியூயார்க்கின் மேல் பகுதியில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பல ஆண்டுகளாகச் சிவப்பு இந்தியப் பழஞ் சின்னங்கள் கண்டெடுக்கப் பெற்றன. சிவப்பு இந்தியரின் ஒரு குறிப்பிட்ட இனத்தை அச்சின்னங்கள் சேர்ந்தவை என்றும், அந்த இனம் கிறிஸ்து பிறந்து சிறிது காலத்துக்குப்பின், சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன் அந்த பிரதேசத்தில் குடியேறியிருக்க வேண்டும் என்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் மதிப்பிட்டிருந்தனர். 1950ஆம் ஆண்டில் அப் பிரதேசத்தில் பல சின்னங்கள் தோண்டியெடுக்கப் பெற்றன. அவற்றைக் கார்பன்-14 மூலம் சோதனை செய்து பார்த்தபொழுது அவை தொல் பொருள் ஆராய்ச்சியாளர் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவை அல்ல என்றும். அவை கி.மு. 3000 ஆண்டுக்கு முற்பட்டவை என்றும் தெரியவந்தன. இது அந்தப் பிரதேச வரலாற்றின் கால அட்டவணையைப் பெரிதும் மாற்றிவிட்டது.

மஞ்சூரியாவில் பு-லா-டியன் என்னும் ஊர் பற்றிய செய்தியைக் கார்பன்-14 ஒரு துப்பறியும் கதை போன்ற தாக்கிவிட்டது. காற்றால் அழிக்கப்பெற்ற அந்த ஊருக்கு வெளியே, வற்றிச் சுண்டிப்போன ஓர் ஏரி உள்ளது. அதன் தண்ணீர் எப்பொழுது மறைந்ததென்பது ஒருவருக்கும் தெரியாது. தரைக்கு அடியில் ஆழத்தில் ஜப்பானியத் தாவர விஞ்ஞானி ஒருவர் நீர்த்தாமரையின் விதைகளைக் கண்டுபிடித்தார். தண்ணீர் மறைந்த காலத்தில் அவை சேற்றில் அமிழ்ந்து அங்கு தங்கிவிட்டன. கார்பன்–14 அந்த விதைகளின் வயது 1,000 ஆண்டு என்று கணக்கிடத் துணை செய்தது. எனவே ஏரி வற்றிய காலமும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் என்று தெரிந்தது.

அந்த விதைகளில் சிலவற்றை முளைக்க வைத்த போது, அவை முளைவிட்டன. 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட விதைகள் முளைக்கமாட்டா என்று உறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்த தாவர விஞ்ஞானிகளுக்கு அது வியப்பூட்டிற்று. அதனால் ஓர் உண்மை தெளிவாயிற்று. ஆயிரம் ஆண்டு சென்ற தாமரை விதை முளைக்கும் என்பதே அந்த உண்மை.

அமெரிக்காவின் தலைநகரமாகிய வாஷிங்டனிலுள்ள தேசியப் பூங்காக்களுக்குப் பல விதைகள் அனுப்பப்பெற்றன. அவை முன்றே நாட்களில் முளைத்து விட்டன. பின்னர் நாற்றுகள் நடப்பெற்றன. நாளடைவில் மொட்டுகள் காணப்பெற்றன. இப்பொழுது பதினாறு இதழ்கள் கொண்ட சிவப்பு நிறமுள்ள பூக்களாக மலர்ந்துள்ளன.

வாஷிங்டனிலுள்ள கெனில்வொர்த் நீர்ச் செடித் தோட்டங்களில் இந்த அழகான பூக்களைக் காணலாம்.

மஞ்சூரியாவின் காட்டுச் சமவெளிகளில் ஆயிரம் ஆண்டு களாகப் புதைந்து கிடைந்த விதைகள் முளைத்துச் செடி களாகிப் பூத்திருப்பதைப் பார்க்கலாம். மைக்ராஸ்கோப் கருவி கண்டுபிடித்தபின், அமைக்கப் பெற்ற மிக வும் முக்கியமான கருவி, கார்பன்-14 கருவியின் கால மதிப்பீட்டு முறையும், இக்கதிர் வீச்சு அணுவின் வேறு பல விஞ்ஞான ஆராய்ச்சிப் பயன்களும் ஆகும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

நோயாளிகளைக் கவனிக்க டெலிவிஷன்

அமெரிக்காவில் மிச்சிகன் சிடி என்ற ஊரில் உள்ள வைத்தியசாலையொன்றில் ஒரே ஒரு நர்ஸ் நோயாளிகளின் அறைகளிலுள்ள காமராக்களு டன் பொருத்தப்பட்டிருக்கும் டெலிவிஷன் திரையைப் பார்ப்பதன் மூலம், "மிக மோச மான" நிலையில் இருக்கும் நோயாளிகள் அனை வரையும் கவனிக்க முடியும். இதே மாதிரி குழந்தை நோயாளிகளையும் பார்க்க முடியும்.

துருக்கி

உலகத்திலுள்ள பழமையான நாடுகளில் ஒன்று துருக்கி. ஐரோப்பாவையும் ஆசியாவையும் இணைக்கும் பாலம் துருக்கி. இந்நாட்டின் ஒரு மாகாணம், ஐரோப்பாவிலும், ஏனைய மாகாணங்கள் ஆசியா மைனரிலும் அமைந்திருக்கின்றன. இன்றுள்ள அரசியல் நிலையில், பூகோள ரீதிப்படி மிகவும் முக்கியமான நாடுகளில் ஒன்று துருக்கி.

துருக்கி ஒரு தீபகற்பம். ருஷ்யாவுக்குச் செல்லும் ஒரே கடல் மார்க்கம் துருக்கியிலுள்ள டார்டுனெல்ஸ் என்னும் ஜலசந்தி வழியாகத்தான். இது சரித்திரப் பிரசித்தி வாய்ந்த ஜலசந்தி. இதன் நீளம் 37 மைல்; அகலம் ஒன்றேகால் மைலிலிருந்து நான்கு மைல் வரை. பல மாறுதல்களுக்குப் பின், கடைசியாக இந்த ஜலசந்தி துருக்கியின் பூரண ஆதிக்கத்திலிருக்கிறது.

பல்லாயிரம் ஆண்டுகளாகவே ஆசியா மைனர், நாகரிகத்தின் இருப்பிடமாக விளங்கிற்று. பல அன்னியர்கள் படையெடுத்தனர். முதலில் கிரேக்கர்கள் அங்கே குடியேறினர். இத்தாலியர்கள், கிரேக்கர்களை வென்று ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். அந்த ஏகாதிபத்தியத்தின் பெயர் பைஸான்டைன் ஏகாதிபத்தியம் என்பது.

பின்னர் மத்திய ஆசியாவிலிருந்து ஊட்டமன் துருக்கியர்கள் 1453ஆம் ஆண்டில், கான்ஸ்டாண்டிநோபின் மீதுபடையெடுத்து, அதனைக் கைப்பற்றினர். ஐரோப்பா

ஆசிய நாடுகளுடன் வியாபாரம் செய்ய அப்பொழுதிருந்த ஒரே வழி துருக்கி மூலமாகத்தான். துருக்கியர்கள் ஐரோப்பிய வியாபாரிகளைத் தடுத்து விட்டனர். எனவே, கொலம்பஸ் சீனு செல்ல வேறொரு வழி காணவேண்டி நேர்ந்தது.

துருக்கியர்களின் அரசர் சுல்தான். சுல்தான் ஆட்சியில் அருகிலுள்ள பால்கன் நாடுகளை வென்றனர். பதினாருவது, பதினேழாவது நூற்றுண்டுகளில் ஊட்டமன் ஏகாதிபத்தியம் உச்ச நிலையிலிருந்தது. மெடிட்டரேனியன் பிரதேசம், மத்திய கிழக்குப் பிரதேசம் ஆகியவை ஊட்டமன் ஆதிக்கத்திலிருந்தன. வியன்னு முதல் மெக்கா வரையிலும், காஸ்பியன் கடல் முதல் அல்ஜீரியா வரையிலும் அதன் ஆதிக்கம் பரவியிருந்தது. ஆனுல் பதினெட்டாவது நூற்ருண்டில், பலயுத்தங்களில், முக்கியமாக ருஷ்யாவுடன் தோல்வி யடைந்ததால், ஏகாதிபத்தியம் குலைந்து, மிகச் சாதாரண நிலைக்கு வந்து விட்டது. நவீன யுத்தக் கருவிகள் தயாரிப்பதில், துருக்கி; ஐரோப்பாவைக் காட்டிலும் மிகவும் பின்னடைந்திருந்ததும் இதற்கு ஒரு காரணமாகும்.

பதினெட்டாவது நூற்றுண்டில், பால்கன் பிரதேசத்திலுள்ள கிறிஸ்துவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாகச் சொல்லி ருஷ்யா பால்கன் நாடுகளைக் கைப்பற்றிற்று. கான்ஸ்டாண்டிநோபிளையும் ருஷ்யா கைப்பற்றி விடக்கூடும் என்று அஞ்சி, பிரிட்டனும், பிரான்சும் ருஷ்யாவுடன் போருக்குச் சென்றன. 1853—56 ஆம் ஆண்டுகளில் கிரிமியன் யுத்தம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 1877 ஆம் ஆண்டில் ருஷ்ய—துருக்கி யுத்தம் நடைபெற்றது. அதனுல் பல்கேரியா பூரண சுதந்திர நாடாயிற்று. ருமேனியாவும் செர்பியாவும், துருக்கிச் சுல்தான்கள் ஆதிக்கத்தை உதறி எறிந்தன.

1900ஆம் ஆண்டில், துருக்கியை "ஐரோப்பாவின் நோயாளி" என்று ஏளனமாகக் கூற ஆரம்பித்தார்கள். அது ஒரு பழமொழி போலாகி விட்டது.

1909ஆம் ஆண்டில், துருக்கியில் இளைஞர்கள் புரட்சியின் காரணமாகச் சுல்தான் தமது பதவியைத் துறந்தார். சட்ட பூர்வமான அரசாங்கம் ஏற்பட்டது.

1911ஆம் ஆண்டில் இத்தாலியுடன் நடைபெற்ற போரிலும், 1912-ஆம் ஆண்டில் பால்கன் நாடுகளுடன் நடைபெற்ற போரிலும் துருக்கி படுதோல்வி அடைந்தது.

1914ஆம் ஆண்டில் முதலாவது உலகயுத்தம் ஆரம்பமானபொழுது, துருக்கி ஜெர்மனியுடன் ஒரு ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டது. துருக்கி ராணுவத்துக்கு ஜெர்மன் ராணுவ நிபுணர்கள் பயிற்சியளித்தனர். எனவே நேசநாடுகள் துருக்கியின் மீது போருக்குச் சென்றன. துருக்கியர் டார்டுனெல்ஸ் ஜலசந்தி, எதிரிகள் வசமாகாமல் வெற்றியுடன் போராடினர். ஆனால் பிரிட்டிஷ் துருப்புக்கள் பாலஸ்தீனம், மெசபடோமியா, சிரியா முதலிய இடங்களைக் கைப்பற்றின.

1919ஆம் ஆண்டில் நேசத் துருப்புக்கள் டார்டுனெல்ஸ், போஸ்ரஸ் முதலிய பகுதிகளையும், கிரேக்கத் துருப்புக்கள் சிமிர்ணு என்ற துருக்கியின் துறைமுகப் பட்டணம் ஒன்றையும் கைப்பற்றின.

1919ஆம் ஆண்டில் முஸ்தபா கெமால், கிராண்டு நாஷனல் அசெம்பிளி என்னும் துருக்கிப் பார்லிமெண்டின் தலைவராகவும், துருக்கி நாட்டின் தலைவராகவும்

தேர்ந்தெடுக்கப் பெற்றார். அவரை கெமால் அதாதுர்க் என்றழைத்தனர். அதாதுர்க் என்றால், துருக்கி மொழியில் "துருக்கியின் தந்தை" என்று பொருள்.

கெமால் அதாதுர்க் 1938ஆம் ஆண்டில், தாம் சாகும் வரை ஒரு சர்வாதிகாரியாகவே இருந்தார்.

1920ஆம் ஆண்டில் கெமால் அதாதுர்க்கின் தேசீயக் கட்சி அரசாங்கத்தை, உலகத்திலுள்ள ஏனைய நாடுகள் அங்கீகரித்தன. கெமால், சிமிர்னாத் துறைமுகப் பட்டணத்திலிருந்த கிரேக்கர்களை விரட்டியடித்தார்.

துருக்கிச் சுல்தான்களே மதத் தலைவர்களாகவும் (கலீபா) இருந்தனர். கெமால், சுல்தான் பதவியையும் மதகுருவின் பதவியையும் தனியாகப் பிரித்தார். பின்னர் சுல்தான் பதவியை அடியோடு ஒழித்து விட்டார்.

முஸ்லிம் மக்கள் நலனுக்குத் தாங்கள் தான் தலைவர்கள் என்ற துருக்கியின் கொள்கையையும், சாம்ராஜ்ய உரிமைகள் என்று சொல்லி வந்தவற்றையும் துறப்பதாகக் கூறினார்.

துருக்கி விவசாய நாடு. அந்நாட்டின் இரண்டு கோடியே எழுபது லட்சம் மக்களில் முக்கால் பங்கினர் விவசாயிகள். அப்பொழுது துருக்கியில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை 10 சத விகிதம் தான். எனவே கெமால் அதாதுர்க் பல சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார்.

துருக்கியர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர் முஸ்லிம்கள். முஸ்லிம் மதக்குருக்களின் ஆதிக்கம் அங்கு அதிகம். புதிய சீர்திருத்தங்களுக்கு மதகுருக்

கள் மிகவும் எதிராக நின்றனர். அந்த எதிர்ப்பைச் சமாளித்துக் கொண்டு கெமால் அதாதுர்க் சீர்திருத்தங்களைச் செய்தார்.

துருக்கியில் நூற்றுக்கு ஒருவருக்குத்தான் அரபு எழுத்துத் தெரியும். துருக்கி மொழிக்கு அரபு எழுத்தை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக லத்தீன் எழுத்தைப் புகுத்தினர். ஆரம்பக் கல்வியைப் பரப்பினர். இப்பொழுது துருக்கியில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை 60 சதவிகிதம்.

துருக்கியர்கள் Fez பெஸ் என்னும் குல்லா அணிவது வழக்கம். அதனைச் சட்டபூர்வமாகத் தடுத்து, தொப்பிகள் அணியும்படி செய்தார். மேலைநாட்டு நாகரிகத்தைப் புகுத்தினர். கான்ஸ்டாண்டிநோபிள் என்னும் நகரத்தின் பெயரை, இஸ்தான்புல் என்று மாற்றினர்.

துருக்கியின் நிலப்பரப்பு 296,000 சதுரமைல். போதுமான தண்ணீர் வசதியில்லாததால், நிலத்தில் இருபது சதவிகிதம்தான் பயிரிடுகிறார்கள். துருக்கியில் மிக முக்கியமான பயிர் புகையிலை. அந்நாட்டின் செல்வம் ஆடுகள். அதன் தொகை இரண்டு கோடிக்கு மேல். உலகில் அதிகமான கம்பளம் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்று துருக்கி.

துருக்கி நாணயத்தின் பெயர் லீரா. ஒரு லீரா நூறு குருக்கள் கொண்டது. ஒரு லீராவின் சட்டபூர்வமான மதிப்பு சுமார் ஒரு ரூபாய் எழுபது நயாபைசா.

துருக்கியின் ராணுவத்தினர் எண்ணிக்கை நாலரை லட்சம். துருக்கியில் ராணுவச் சேவை கட்டாயம்.

அங்கு ராணுவப் பயிற்சி பெற்றவர் தொகை 20 லட்சம். மக்கள் தொகையில் பத்தில் ஒருவர் ராணுவப் பயிற்சி பெற்றவர்.

கெமால் அத்தாதுர்க்கின் மரணத்துக்குப் பின் இஸ்மெத் இனேனு துருக்கியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார் இனேனு ஒரு போர் வீரர். கெமால் அதாதுர்க்கின் வலது கையாக இருந்தவர். 1950 ஆம் ஆண்டு வரை அவரே தலைவராக இருந்தார். பின்னர் முதலாவதாக நடைபெற்ற ஜனநாயகத் தேர்தலில் செலேல் பேயர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

துருக்கிப் பார்லிமெண்டில் இரண்டு முக்கியமான அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஒன்று இஸ்மெத் இனேனுவைத் தலைவராகக் கொண்ட ரிபப்ளிக்கன் கட்சி; மற்றொன்று அட்னன் மெந்தரேயைத் தலைவராகக் கொண்ட டெமாகிரட்ஸ் கட்சி.

1950, 1954, 1957 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் டெமாகிரட்ஸ் கட்சியினர் அமோக வெற்றி பெற்றனர். அட்னன் மெந்தரே தொடர்ந்து பிரதம மந்திரியாகப் பணியாற்றினார். துருக்கிப் பார்லிமெண்டில் உள்ள 602 ஸ்தானங்களில் டெமாகிரட்ஸ் கட்சியினர் 421 ஸ்தானங்களைக் கைப்பற்றினர்.

மெந்தரேயின் ஆட்சி, எதிர்க் கட்சியினரை அளவில்லாத் துன்பத்துக்கு உள்ளாக்கியது. அரசாங்கத்தைத் தாக்கி எழுதிய சுமார் எண்ணூறு பத்திரிகைக்காரர்கள் சிறையிலிடப் பெற்றனர். எதிர்க் கட்சித்

தலைவர் இனோனு, பிரசங்கங்கள் செய்வதற்காக ஒரு சுற்றுப் பிரயாணம் தொடங்கத் திட்டமிட்டார். அதனை மெந்தரே, ராணுவத்தைக் கொண்டு தடுத்து விட்டார்.

துருக்கி ராணுவத்தை உள்நாட்டுச் சண்டைகளுக்காக இதுவரை யாரும் உபயோகித்ததில்லை. கட்சிகளைச் சேராமல், நாட்டுக்குப் பணிசெய்யும் பண்பிலேயே இதனை வளர்த்தார் கெமால் அதாதுர்க். மெந்தரே ராணுவத்தைத் தனது கட்சிககாக உபயோகிப்பதை எதிர்த்து மூன்று பெரிய ராணுவ அதிகாரிகள் தம் பதவிகளை ராஜிநாமாச் செய்தனர். உடனே அரசாங்கம் அவர்களைக் கைது செய்தது.

சிறந்த ராணுவத் தளவாடங்கள் உள்ள நாடுகளில் ஒன்று துருககி. துருக்கியர்களுக்கும் ருஷ்யர்களுக்கும் பரம்பரையாகவே வெறுப்பு இருப்பதால், துருக்கியர்கள் தாங்களாகவே மேலை நாடுகளுடன் சேர்ந்து கொண்டார்கள். அமெரிக்கா துருக்கிக்கு இதுவரை அளித்துள்ள உதவி சுமார் ஆயிரம் கோடி ரூபாயாகும். இவ்வளவு செய்தும் துருக்கியில் பெரிய ஆலைகள் ஏற்படவில்லை. துருக்கியர்கள் வாழ்க்கைத் தாம் உயரவில்லை. வறுமை எங்கும் தாண்டவமாடுகிறது. அமெரிக்க உதவிப் பணத்தை எல்லாம் துருக்கி தாறுமாறாகவும், வீணாகவும் உபயோகித்ததாகக் கூறுகிறார்கள். அரசாங்கம் அதிகப் பணம் செலவு செய்தது. அதன் காரணமாக பணவீக்கம் அதிகமாகி, துருக்கி நாணயத்தின் மதிப்புக் குறைந்தது. அரசியலும் ஆட்டம் கொடுத்தது. துருக்கியின் அயல் நாட்டுக் கொள்கையைக் குறித்து, இரண்டு அரசியல் கட்சிகளுக்குமிடையே சிறிதளவும் கருத்து வேற்றுமை கிடையாது. ஏனெனில் தங்கள் நன்மையை முன்னிட்டே அவர்கள் மேலை நாடுகளுடன் சேர்ந்துள்ளனர். நாட்டோ

ஸ்தாபனத்தின் கப்பல்தளம் ஒன்றும் துருக்கியில் இருக்கிறது. பாக்தாத் ஒப்பந்தம் (ஈராக் விலகும் வரை) என்னும் கூட்டுறவிலும் துருக்கி அங்கம் வகித்தது.

1960ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நெருக்கடி ஏற்பட்டது. துருக்கிப் பார்லிமெண்டில், எதிர்க் கட்சியின் சட்ட விரோதமான காரியங்கள் என்று கூறுவனவற்றை விசாரிப்பதற்காக ஒரு குழு நியமித்தனர். அக்குழுவின் அங்கத்தினர் அனைவரும், ஆளும் கட்சியினரான டெமாகிரட்ஸ் கட்சி அங்கத்தினர்களே. அக்குழுவுக்குப் பார்லிமெண்டு சர்வாதிகாரம் வழங்கிற்று.

இனோனு அதனைச் சட்ட விரோதம் என்று கூறி எதிர்த்தார். அரசாங்கத்தை எதிர்த்ததற்காக பன்னிரண்டு பார்லிமெண்டுக் கூட்டங்களுக்கு வரக்கூடாது என்று தடை விதித்தனர். சர்வாதிகாரக் குழு, எல்லா அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளையும், அவர்கள் வெளியிடும் அறிக்கைகளையும் மூன்று மாத காலத்துக்குத் தடுத்தது. இது அதிக நெருக்கடியை உண்டாக்கிற்று. பத்து லட்சம் மக்கள் கொண்ட இஸ்தான்புல் நகரத்திலும், நான்கு லட்சம் மக்கள் கொண்ட தலைநகரான அங்காராவிலும் மற்றும் உள்ள நகரங்களிலும் உள்ள சர்வ கலாசாலை மாணவர்கள் ''மெந்தரே ராஜிநாமாச் செய்க" "சுதந்திரம்'' என்று கோஷமிட்டு மாபெரும் ஊர்வலம் வந்தனர். துருக்கியிலுள்ள மொத்தம் எட்டுச் சர்வ கலாசாலைகளின் மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

போலீசார் மாணவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; மாணவர்கள் கற்களை வீசினர். இறந்தவர் தொகை: மாணவர் ஐவர்; போலீசார் மூவர்: காயமடைந்தோர் நூற்றுக் கணக்கில்.

மெந்தரே அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தது. ராணுவக் கல்லூரி மாணவர்களும், அதிகாரிகளும், சுமார் ஆயிரம் பேர், அரசாங்கக் கொள்கையை எதிர்த்து ஊர்வலம் வந்தனர்.

கடைசியாக நடந்த துருக்கிப் பார்லிமெண்டுக் கூட்டத்தில் இரு கட்சியினரும் ஒருவர்மீது ஒருவர் இங்கிப் புட்டிகளையும், நாற்காலிகளையும் வீசினர்.

1960ஆம் ஆண்டு மே மாதக் கடைசியில் ராணுவத்தினர் ஆட்சியைக் கைப்பற்றினர். தலைவர் பேயரையும், பிரதம மந்திரி மெந்தரேயையும் கைது செய்தனர்.

பிரதம மந்திரி மெந்தரே மத்திய மாகாணங்களில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபொழுது இந்த ராணுவப் புரட்சி நடைபெற்றது. இதனைக் கேள்வியுற்ற மெந்தரே, ஒரு விமானத்தில் ஏறி, நாட்டை விட்டு வெளியே செல்ல முயன்றார். துருக்கி விமானப்படையைச் சேர்ந்த இரண்டு ஜெட் விமானங்கள் மெந்தரே சென்ற விமானத்தைத் துரத்தி, உயரப்பறந்து, மெந்தரே சென்ற விமானத்தைக் கட்டாயமாகக் கீழிறக்கின.

விமானத்திலிருந்து இறங்கியதும், மெந்தரே வழியில் சென்ற ஒருகாரை நிறுத்தி, அதில் ஏறித் தப்ப முயன்றார். ஜெட்விமானிகள் வேறொரு காரில் ஏறி, அவரைத் துரத்திக் கடைசியாகக் கைது செய்து, ஒரு ராணுவ விமானத்தில் அவரை தலைநகரான அங்காராவுக்குக் கொண்டு வந்தனர்.

இஸ்மெத் இனேனுவின் வீட்டை ராணுவத்தினர் (மரியாதையைக் காட்டும் அறிகுறியாக)க் காவல் காத்து வருகின்றனர்.

அறுபத்து நான்கு வயது நிறைந்த லெப்டினெண்ட் ஜெனரல் குர்செல் பொறுப்பேற்ருர். ராணுவ அதிகாரிகளைக் கொண்ட "தேசீய ஒற்றுமைக் குழு" ஒன்றை ஏற்படுத்தினர். "சர்வாதிகாரியாகும் நோக்கம் எனக்குச் சிறிதும் இல்லை. விரைவில் தேர்தல் நடைபெறும். தேர்தலில் வெற்றுபெறும் கட்சியிடம் அரசாங்கம் ஒப்படைக்கப்பெறும். அயல் நாட்டுக் கொள்கையிலும் எந்த விதமான மாறுதலும் இல்லை" என்ருர்.

குர்சலின் ஆட்சியை, இந்தியா உள்பட பல நாடுகள் அங்கீகரித்துள்ளன.

காட்டு வளம்

காட்டு வளம் காத்தல் நாட்டுக்கு நல்லது. வன வளம் இல்லையேல் மழை வளம் குன்றும். மழை மிகுதியாகப் பொழிய வேண்டுமாயின் ஓங்கி வளர்ந்த மரங்கள் அடர்ந்த காடுகள் வேண்டும். காட்டு வளம் காக்க அமெரிக்காவில் பல வகை ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து மக்கள் வந்து குடியேறிய ஆரம்பக் காலத்தில், அட்லாண்டிக் கடற்கரை முதல் பெரிய சமவெளிகள் வரை முழுவதும் காடுகளே. அந்நாளில் பயிர் செய்வதற்காக மரங்களை வெட்டினர். நகரங்கள் வளர்ச்சியடையத் தொடங்கின; ரயில் பாதைகள் போடப் பெற்றன; தொழிற்சாலைகள் பெருகின. எனவே, காடுகள் குறையத் தொடங்கின. மரங்களை மேலும் மேலும் வெட்டினர். நெருப்பாலும் காடுகள் அழிந்தன. மக்கள் அது பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. சென்ற நூற்றாண்டின் இறுதியில்தான் காடுகளைக் காக்க வேண்டும் என்னும் எண்ணம் சிலருக்கு ஏற்பட்டது.

அரசாங்கம் வனவளப் பாதுகாப்பு முயற்சியில் அக்கறை காட்டியது. காடுகள் நாட்டுச் செல்வமாகப் பேணப் பெற்றன. பிற்காலத்தில் அவை மத்திய அரசாங்கக் காடுகள் எனப் பெயர் பெற்றன. அத்தகைய காடுகளில் ஒன்று "யெல்லோ ஸ்டோன்" என்னும் உலகப் புகழ் பெற்ற தேசியப் பூங்கா.

தியோடோர் ரூஸ்வெல்ட் தாம் ஜனாதிபதியாவதற்கு முன்பே நாட்டு வளம் காக்க காட்டு வளம் காக்க வேண்டும் என்னும் எண்ணம் உள்ளவர். எனவே, அவர் தமது காலத்தில் அதற்கு வேண்டுவனவற்றையெல்லாம் செய்தார். விவசாய இலாகாவில் காட்டு வளம் காக்கும் பிரிவு ஒன்றை உண்டாக்கினர். அவர் பதவியினின்று விலகுவதற்கு முன் மேற்குக் கோடியிலுள்ள பெரிய காடுகளெல்லாம் அரசாங்கக் காடுகள் ஆயின. அவற்றில் யாரும் மரத்தை வெட்டி விற்க முடியாது. இவ்வாறு மரங்கள் பாதுகாக்கப் பெற்றன.

இன்று அமெரிக்காவில் நூற்று நாற்பத்தெட்டு அரசாங்கக் காடுகள் உள்ளன. அவற்றின் பரப்பு சுமார் 18 கோடி ஏகரா. பொதுமக்கள் அனைவரது நன்மைக்காகவும் மரங்களும், தண்ணீரும், விலங்கினங்களும் மற்ற வன வளங்களும் அவற்றில் பாதுகாக்கப் பெறுகின்றன. அதுவுமல்லாமல், இயற்கை எழில் கொழிக்கும் அக்காடுகள் மக்கள் இன்பமாய்ப் பொழுது போக்கவும் வாய்ப்பளிக்கின்றன.

புதிய மருந்துகள்

ருஷ்யாவில் பல புதிய மருந்துகளைத் தயாரித்துப் பரிசோதனை செய்து பார்த்தனர்.

இப்புதிய மருந்துகளில் ஒன்று அப்ரெசின் என்பது. இரத்தக் கொதிப்பிற்கு இதை விடச் சிறந்த மருந்து இதுவரை தயாரானதில்லை என்று கூறுகின்றனர். இது, இரத்த அழுத்தத்தை உடனே குறையச் செய்து விடுகிறது; தலைவலியை நீக்கி விடுகிறது; நோயாளியின் உடல் நிலையைப் பெரிதும் மேன்மையுறச் செய்கிறது.

ருஷ்யாவில் தயாராகும் மற்றொரு புதிய மருந்து தியாஜில் என்பது. இது நரம்புக் கோளாறுகளுக்கும், மானசீக வியாதிகளுக்கும் ஏற்ற மருந்து.

இளம்பிள்ளை வாதம் கடுமையான நோய். மக்கள் அதற்கு அஞ்சினார்கள். அது முடமாக்கும் பிணி. அதனைத் தீர்க்க அமெரிக்காவில் டாக்டர் சால்க் என்பவர் ஊசி மருந்து ஒன்றைக் கண்டு பிடித்தார். முதலில் மிருகங்களைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான சோதனைகள் நடத்தினார். பின்னர் தாம், தமது மனைவி, தமது மூன்று புதல்வர்கள் உள்பட ஒன்பதாயிரம் மக்களுக்கு அந்த மருந்தைப் பயன்படுத்திப் பார்த்தார். அமெரிக்க விஞ்ஞானிகள் கூட்டத்தில் சால்க் மருந்து சிறிதும் ஆபத்து இல்லாதது, நல்ல பயன் விளைவிப்பது என்று கூறினர். மக்கள் குலத்தின் நலனுக்கான செய்துள்ள இந்த மாபெரும் பணியைப் பாராட்டி அமெரிக்க நாடு, டாக்டர் சால்க் அவர்களுக்குப் பொற் பதக்கம் வழங்கிற்று.

ஸ்டாபிலோகோஸி என்ற கிருமிகள் சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருப்போர் உடலிலும் புகுந்து கொள்ளும். வாய்ப்புக் கிடைக்கும்போது, வெளிப்பட்டு, கட்டி, கப ஜுரம் எனப் பல நோய்களைக் கிளப்பிவிடும். பெனிஸிலினைக் கண்டுபிடித்தபோது, இவற்றை ஒழிக்கப் புது மருந்து கிடைத்து விட்டது என்ற நம்பிக்கை வைத்திய நிபுணர்களுக்கு ஏற்பட்டது. ஆனல் வெகு விரைவில் அது மாறிற்று. இவை பெனிஸிலினை எதிர்க்கும் ஆற்றலை வளர்த்துக் கொண்டு பலுகின. இவற்றை ஒழிக்க ஸிபலோஸ்பரின் என்றதோர் மருந்தைப் பிரிட்டிஷ் வைத்திய விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இன்புளுவென்ஸா நோய் பரவாமல் தடுப்பதற்கு நோயாளிகள் உள்ள அறையின் மேல்பாகத்தில் (அல்ட்ரா வயலட்) ஊதா மேற்கதிர்களைப் பாய்ச்சவேண்டும் என்கிறார் டாக்டர் ராஸ் மெக்ளின் என்னும் அமெரிக்க வைத்திய நிபுணர்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

கவுண்டர் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,

மானேஜிங் டைரக்டர்

தீயை அடக்கியாண்ட அறிவும்
சக்கரத்தைப் பயன்படுத்திய
சாமர்த்தியமுமே நமக்கு
மோட்டார் சாதனத்தை
அளித்தன

JWT TVS/7873

இன்று. தென்னிந்தியாவில் மோட்டார் வாகனத் தொழிலில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பலவிதமான தேவைகள் அனைத்தையும் டி.வி.எஸ் ஸ்தாபனம் அதனோடு இணைந்துள்ள பல கிளை ஸ்தாபனங்களின் மூலம் பூர்த்தி செய்து வருகிறது.



TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட். மதுரை
கிளைகள் :
திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்